வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P.1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 06 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 257 பக்கங்கள் : 16

# நாட்டின் அரசியலில் விரைவில் பெரும் சுழல்காற்று வீசக்கூடும்!

## மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை



கொழும்பு, செப். 14

**தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள ஜனநாயக ரீதியில் செயல்படுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இளைஞர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். விரைவில் நாட்டு அரசியலில் பாரிய சுழல்காற்று வீசக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.**

தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் இந்த கோரிக்கையை வெளியிட்டார்.

உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து கால்டன் இல்லத்தை சென்றடைந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தனியார் தொலைக்காட்சி ஒன்று நேற்று விசேட நேர்காணல் நடத்தியுள்ளது.

இதன் போது, அரசியல், பொருளாதாரம், யுத்த வெற்றி உள்ளிட்ட பல விடயங்களைப் பற்றிய கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

தற்போது கால்டனில் வசித்தாலும், தேவை ஏற்படும் பட்சத்தில் கொழும்புக்கு விரைந்து வர தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தம் மீதான விமர்சனங்கள் தொடர்பாக கவலையடைய தேவையில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விரைவில் நாட்டு அரசியலில் பாரிய சுழல் காற்று வீசக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

15

# பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவு!

கொழும்பு, செப். 14

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பலஸ்தீனப் பிரச்னை குறித்த தீர்மானத்தை இலங்கை வரவேற்கிறது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

பலஸ்தீனப் பிரச்னைக்கு, அமைதிக்கான தீர்வு மற்றும் இரு நாடுகள் தீர்வை செயற்படுத்துதல் குறித்த நியூயார்க் பிரகடனத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக்கொண்டதை இலங்கை வரவேற்கிறது.

இந்த முக்கியமான முயற்சியில் தலைமை தாங்கியதற்காக சவுதி அரேபியா மற்றும் பிரான்ஸூக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்

15

# மகிந்தவால்தான் வடக்கு முன்னேற்றம் அடைந்தது!

## மொட்டு கட்சி பெருமிதம்

கொழும்பு, செப். 14

“மகிந்த ராஜபக்ஷவால்தான் வடக்கு மாகாணம் எல்லா வழிகளிலும் முன்னேறியது. பிரிவினைவாத சிந்தனையுடைய ஒரு சிலரே மஹிந்தவின் வெளியேற்றத்தை கொண்டாடுகின்றனர்.”

இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது,

“மகிந்த ராஜபக்ஷ விஜேராம அரச மாளிகையில் இருந்து வெளியேறியது தொடர்பில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் யாழிலுள்ள

15

# பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கவுள்ளது ஐ.நா.!

## தீர்மானத்துக்கு 142 நாடுகள் ஆதரவு

நியூயோர்க், செப். 14

பலஸ்தீனப் பிரச்னையை அமைதியான முறையில் தீர்த்து வைப்பது மற்றும் இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளை தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பது குறித்த 'நியூயோர்க் பிரகடனத்தை' ஆதரிக்கும் தீர்மானத்துக்கு ஐ.நா. பொதுச் சபையில் 142 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

பிரான்ஸ் அறிமுகப்படுத்திய இந்தத்

15

# 2026முதல் உரிய காலப்பகுதியில் பாடசாலை பரீட்சையை நடத்த திட்டம்

கொழும்பு, செப். 14

அடுத்த வருடம் முதல் சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை உரிய காலப்பகுதியில் நடத்துவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (உ/த) பரீட்சையை ஓகஸ்ட் மாத்திலும் , 2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சா/த) பரீட்சையை டிசெம்பர் மாதத்திலும் நடத்த திட்டமிட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரி வித்துள்ளது.

அத்துடன் 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த

15

# மன்னார் காற்றாலை மின் திட்டம் அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில்

கொழும்பு, செப். 14

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்திடமிருந்து கிடைக்கும் பதிலின் ஊடாக, அடுத்தகட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சின் செயலாளர் டி.எம். உதயங்க ஹேமபால தெரிவித்தார்.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கான நடவடிக்கை குறித்து, ஜனாதிபதியால் ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினத்துடன் அந்த கால அவகாசம் நிறைவடைந்தது.

இந்த காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட நடவ டிக்கைகள் குறித்து, எரிசக்தி அமைச்சிடம்

15

# இந்தியாவில் அமெரிக்க, இஸ்ரேலிய தூதரகங்களைத் தாக்குவதற்கு சதி!

## இலங்கையிலுள்ள பாகிஸ்தான் அதிகாரிக்கு அழைப்பாணை

கொழும்பு, செப். 14

இந்தியாவின் சென்னை, பூந்தமல்லியில் உள்ள தேசிய புலனாய்வு முகவரமைப்பு சிறப்பு நீதிமன்ற அழைப்பாணையொன்றை இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் கடமைபுரியும் அதிகாரியொருவருக்கு அனுப்பியுள்ளது.

சென்னையில் உள்ள அமெரிக்கத்தூதரகம் மற்றும் பெங்களூருவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் ஆகியவற்றைத் தாக்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டே குறித்த பாகிஸ்தான் தூதரக அதிகாரிக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தற்போது இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணிபுரிந்து வரும் குறித்த அதிகாரி, ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்

15

# தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் போதைப்பொருள் விடயத்தில் தொடர்பு!

## பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

கொழும்பு, செப். 14

போதைப்பொருள் விவகாரத்தில் சிங்கள அரசியல்வாதிகள் மாத்திரம் தொடர்பில் இல்லையெனவும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் தொடர்பில் உள்ளதாக சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இன்றைய நாட்களில் அந்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் சுந்தரலிங்கம் பிரதீப் கூறினார்.

மிக விரைவில் சமூகத்துக்கு நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க தாம் தொடர்ந்து செயற்படுவதாக அவர் தெரிவித்தார்.

போதைப்பொருளால்

15

# மாகாணத் தேர்தலை விரைவாக நடத்த கூட்டு எதிரணியாக அரசுக்கு அழுத்தம்!

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு, செப். 14

மாகாணசபைத் தேர்தலைக் கண்டு அரசாங்கம் எதற்காக அஞ்சுகின்றது? இத்தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கத்துக்குள்ள உண்மையான மக்கள் ஆணை என்ன என்பது வெளிப்படும். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதி பெல்லன்வில தம்மரத்ன தேரரை சந்தித்த போதே அவர் இவ்விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்த தேசிய

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிகளில் ஈடுபடும் முகவர் நிறுவனங்கள்மீது நடவடிக்கை

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 14

மக்களை பிழையாக வழி நடத்தி மோசடி செய்யும் பதிவு செய்யாத வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு - வெளிநாட்டு வேலை வாய்ப்பின் கீழ் வடமாகாணத்தின் மாவட்டங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், இணைய நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதி அமைச்சர் தெரிவித்தவை வருமாறு,

எமது அமைச்சால் இந்தக் கலந்துரையாடல் களுத்துறை, காலி மாவட்டங்களில் ஆரம்பித்து வெற்றியடைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெற்றது. எமது நாட்டுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதாகவும் அந்தவகையில் ஆண்டுக்கு சுமார் 03 இலட்சம் வரையான வர்கள் வெளிநாடு செல்வதாகவும் தெரிவித்தார். மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முறைமையை சரியான முறையில் கட்டமைக்க வேண்டிய தேவையுள்ளது. பதிவு செய்த குடும்பங்களின் நலன்களில் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது. இதே வேளை நாட்டின் குடிமகன் என்ற ரீதியில் பதிவு செய்யாது சென்றவர்களின் குடும்பங்களின் நலன்களிலும் கரிசனை செய்ய வேண்டிய பொறுப்பும் எமக்குள்ளது.

மக்களை பிழையாக வழி நடத்தி மோசடி செய்யும் பதிவு செய்யாத வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடிக்கு அரசாங்கம் தீர்வு கண்டு வருகிறது. வேலை வாய்ப்பு தொடர்பில் எடுக்கப்படும் உயர்மட்டத் தீர்மானங்கள் கீழ் மட்டம் வரை சென்றடைய அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மக்களின் தேவைகளை தட்டிக்கழிக்காமல் சேவையை வழங்க வேண்டும்.- என்றார். (எ)

# நிமலராஜன் படுகொலை விசாரணை அறிக்கை யாழ். நகரில் விநியோகம்



யாழ்ப்பாணம், செப். 14

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனுக்கு நீதி கோரிய விசாரணை அறிக்கை ஊடகவியலாளர்களால் யாழ். நகரில் நேற்று சனிக்கிழமை விநியோகிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமைய தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் ஊடகவியலாளர்களால், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விசாரணை அறிக்கை விநியோகிக்கப்பட்டது.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை, நிமலராஜன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரது வீட்டினுள் கைக்குண்டு வீசி தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரது தந்தை, தாய் மற்றும் மருமகன் ஆகியோர் காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இருபத்தைந்து, ஆண்டுகளாக நீதி நிலைநாட்டப்படாத நிலையில் குறித்த விசாரணை அறிக்கை விநியோகிக்கப்பட்டது. (எ)

# சீரற்ற காலநிலையால் யாழில் பாதிப்புகள்




யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணத்தில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

அந்தவகையில் நவக்கிரி பகுதியில் மின்னல் தாக்கியதில் தோட்டத்தில் உள்ள மோட்டர் அறை, மோட்டர், மின்சார இணைப்பு என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன.

அத்துடன் அவருடைய தோட்டத்தில் இருந்த 50 இற்கும் மேற்பட்ட வாழை மரங்களும் முறிந்து அழிவடைந்துள்ளன.- என்றார். (எ-5)

# மன்னார் போராட்டத்துக்கு ஆதரவாக முல்லைத்தீவிலிருந்து நடைபயணம்



முல்லைத்தீவு, செப். 14

மன்னார் காற்றாலை திட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக முல்லைத்தீவு இளைஞர்கள் இருவர் மன்னார் நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்த நிலையில் குறித்த இரு இளைஞர்களும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மன்னாரை சென்றடைந்தனர்.

காற்றாலை திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்காலிலிருந்து இரண்டு இளைஞர்கள் நடை பயணம் ஒன்றை கடந்த புதன் கிழமை ஆரம்பித்தனர்.

இவர்கள் முல்லைத்தீவிலிருந்து நடந்து சென்றதோடு துண்டுப் பிரசுரங்களை வீதியோரங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கினர்.

இந்த நிலையில் குறித்த இரு இளைஞர்களும் வெள்ளிக் கிழமை மாலை 06 மணியளவில் மன்னார் தள்ளாடி சந்தியை சென்றடைந்தனர். (எ)

# போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், செப். 14

கொழும்புத்துறை பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 20 வயது இளைஞன் ஒருவர் 40 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைத் தடுப்பு பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-3-5)

# யாழ்.போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கதிரியக்க பிரிவில் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுவதனால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கதிரியக்க பிரிவில் பணியாற்றி வந்த மருத்துவர்கள், பதவி உயர்வு, இடமாற்றம் என வெளியேறியமையால் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் நோயாளர்கள், எக்ஸ்ரே, அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர், எம். ஆர். ஐ. உள்ளிட்டவற்றை எடுப்பதற்கு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவற்றை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எடுப்பதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலைமைகள் காணப்படுவதால், அதற்குள் நோயின் தீவிரம் அதிகரிப்பதாக நோயாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சில நோயாளிகள் தனியார் மருத்துவமனையில் அவற்றை எடுப்பதற்காக பெருமளவு பணத்தை செலவுசெய்கின்றனர்.


எனவே, யாழ் . போதனா மருத்துவமனையின் கதிரியக்க பிரிவில் மருத்துவர்கள் பற்றாக்குறையை தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-03)

# "இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களின் எதிர்காலம் பற்றியும் கவனம் செலுத்தவும்"

யாழ்ப்பாணம், செப். 14

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பிய குடும்பங்களின் ஒளிமயமான எதிர்காலம் நோக்கியும் கவனம் செலுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பின் கீழ் வட மாகாணத்தின் மாவட்டங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன் தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இதில், உரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் குடும்பங்களையும் வெளிநாட்டிலிருந்து திரும்பிய வர்களின் குடும்பங்களையும் வெளிநாடுகளில் உள்ளவர்களின் நலன்களை பேணுவதும் மற்றும் வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உள்ளது.

தற்போது இந்தியாவிலிருந்து மீளத் திரும்பிய குடும்பங்களின் ஒளிமயமான எதிர்காலம் நோக்கியும் கவனம் செலுத்த வேண்டும். எமது நாட்டின் அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வினைத்திறனாக செயல்பட்டு தமது பங்களிப்பை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சின் நோக்கம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) என். பாலேசுமவும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பு குறித்து அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) எஸ். பிரசாத் பியசேனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர் யு. ரோஷனும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கே. கனகேஸ்வரனும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி. ஜெயக்காந் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி பி. அஜிதா ஆகியோரும் தத்தமது மாவட்டங்களின் நிலவரங்களை எடுத்துக் கூறினர்.

இதில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன், அமைச்சின் பிரதம கணக்காளர் சி. பி. ஹலபதி, சிரேஷ்ட உதவிச் செயலாளர் வசந்தகுமாரி, யாழ். மாவட்ட இணைப் பாளர் ஜீ. பிராங்கிளின், வடமாகாணத்தின் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதே அரசாங்கத்தின் நோக்கம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, செப். 14

**பொருளாதார வளர்ச்சி இலக்குகளை விரைவாக அடைவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.**

வர்த்தகத் துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், சட்ட விதிகளை உருவாக்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தலை அரசாங்கம் மேற்கொள்கிறது என்றும் உள்நாட்டு வர்த்தகர்களுக்கு மற்றும் தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முழுமையாக பங்களிக்க உதவுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இலங்கை இளம் தொழில்முனைவோர் மன்றத்தின் பிரதிநிதிகளுடன் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் பங்கேற்ற போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டை நவீனமயப்படுத்த இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அரச சேவைக்குத் தேவையான நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளை வழங்குவதுடன் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத் திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ)

# சித்தங்கேணியில் பாலர் பாடசாலையின் வைர விளையாட்டு விழா நடைபெற்றது



யாழ்ப்பாணம், செப். 14

சித்தங்கேணி மாதர் கிராம அபிவிருத்தி சங்கமும் முகாமைத்துவ குழுவும் இணைந்து நடத்திய பாலர் பாடசாலையின் 60ஆவது ஆண்டு வைர விளையாட்டு விழா நேற்று முன்தினம் சித்தங்கேணி பிள்ளையார் ஆலய பின் வீதியில் நடைபெற்றது.

இதன்போது, விருந்தினர்கள் மாலை அணிவித்து, சிறுவர்கள் மேற்கத்தேய இசை வாத்தியங்கள் இசைக்க நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றி, ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டு விளையாட்டு விழா நடைபெற்றது. பின்னர் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள், பரிசில்கள் வழங்கல் போன்றன நடைபெற்றன.

சித்தங்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தங்கராசா கோமளவள்ளியின் தலைமையில் நடைபெற்ற இந்த விளை யாட்டு விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் கவிதா உதயகுமார் கலந்து சிறப்பித்த துடன், இந்து மதகுருமார்கள், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி சிறார்கள், பெற்றோர்கள் மற்றும் பார்வையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

# ஜனாதிபதியை எதிர்க்கட்சி தலைவர் முன்மாதிரியாக கொள்ள வேண்டும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

எதிர்க்கட்சித் தலைவர் நிலையியற் கட்டளை 27/ 2இன் கீழ் கேள்விகளை கேட்கும் போது, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடந்த பாராளுமன்றத்தில் செயல்பட்டதை ஒரு முன்னுதாரணமாக கடைப்பிடிக்க வேண்டும். பாராளுமன்றத்தின் கோட்பாடுகள் மற்றும் மரபுகளை எதிர்க்கட்சித் தலைவர் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின்போது சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளை சுட்டிக்காட்டி உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க போதுமான கால அவகாசம் வேண்டும். உரிய நேரத்தில் பதிலளிக்கிறோம். நிலையியல் கட்டளை பற்றி விசேடமாக குறிப்பிட வேண்டும்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளையில் "பொதுக் காரணிகளில் முக்கியமான விடயங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களோ குறித்த விடயத்தை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு முன்னறிவித்ததன் பின்னர் அந்தக் கேள்விகளை கேட்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளில் என்ன பொதுக் காரணிகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, தர்மாசிரியர் பரீட்சை மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகம், கம்பஹா விக்கிரமராச்சி பல்கலைக்கழகம் பற்றிய கேள்விகளை முன்வைத்துள்ளார். இந்தக் கேள்விகளுக்கு ஓர் அமைச்சின் ஊடாக மாத்திரம் பதிலளிக்க முடியாது.- என்றார். (எ)




# சஷீந்திர ராஜபக்ஷவுக்கு தூக்கத்தில் மூச்சு திணறல்

கொழும்பு, செப். 14

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, தூக்கத்தின் போது கடுமையான மூச்சுத்திணறல் பிரச்னையை அனுபவிப்பதாகவும், ஒரு மணி நேரத்துக்குள் சுமார் 35 முறை சுவாசக் கடினம் ஏற்படுவதாகவும் அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதனால் அவரின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, அவரை சிகிச்சை பெறும் வகையில் பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார். எனினும், குறித்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்து விட்டது.

இதனால், நேற்று முன்தினம் நீதிமன்ற வளாகத்தில் சஷீந்திர ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே பெரும் பரபரப்பு நிலவியது. (எ)

# "அதிகார சபையை நிறுவும் அதிகாரம் வழங்கப்படும்"

## சூதாட்ட ஒழுங்குமுறை சட்டம் குறித்து விளக்கம்

கொழும்பு, செப். 14

சூதாட்ட ஒழுங்குமுறை அதிகார சபை சட்டத்தின் ஊடாக சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகார சபையை நிறுவும் அதிகாரம் வழங்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தச் சட்டம், சூதாட்டத்தால் சமூகத்தில் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளை ஆய்வு செய்து, அது தொடர்பாக விதிமுறைகளை வெளியிட அதிகார சபைக்கு அதிகாரங்களை வழங்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலுமு கூறுகையில்,

"அனைத்து சட்டங்களையும் ஒரே இடத்துக்குக் கொண்டு வந்து அதிகார சபை நிறுவுவது, சூதாட்ட ஒழுங்குமுறை அதிகார சபை சட்டத்தின் ஊடாக பிரதானமாக அதிகாரங்களை வழங்குவதாகும்.

அந்த அதிகார சபை, கசினோ, சூதாட்டத்துக்கு இரண்டு உரிமங்களை வழங்கும் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. இது ஒழுங்குமுறை பற்றியது. அந்த ஒழுங்குமுறை அனைத்தையும் உள்ளடக்கியது.

அந்த ஒழுங்குமுறையில், எந்த் சூதாட்டங்களுக்கு அனுமதி வழங்குதல், அனுமதிக்கப்பட்டால், அதற்கு உட்பட்ட கட்டுப்பாடுகள்.

அத்துடன் கொடுக்கப்பட்ட உரிமத்தை நீக்குதல் அல்லது தடை செய்தல் போன்ற அனைத்து விடயங்களையும் இதன் கீழ் செய்ய முடியும்.

சூதாட்டம் சமூகத்திலும் கலாசாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது."- என்றார். (எ)

# காங்கேசன்துறை கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு, செப். 14

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு திசையிலிருந்து வீசக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்தோடு, மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்கமாக கூற முடியாத அளவுக்கு பல பழிவாங்கல்களில் ஈடுபடும் அரசு

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கண்டி, செப். 14

முன்னர் எந்தவொரு அரசாங்கமும் இவ்வாறு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடவில்லை. பகிரங்கமாக கூற முடியாத பல பழிவாங்கல்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கண்டி, அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களுக்கு சென்று மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதன்ன அடிப்படையற்ற காரணிகளைக் கூறி தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய படைத்தளபதிகள் இவ்வாறு அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் மகாசங்கத்தினருக்கு தெளிவுபடுத்துவதற்காகவே நாம் இங்கு வருகை தந்தோம்.

அரசாங்கம் அபிவிருத்திகளையோ சமூக மேம்பாட்டையோ செய்யவில்லை. கடன் சுமை முன்னரை விட தற்போது அதிகரித்துள்ளது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள், அரசியல் பழிவாங்கல்களைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. எவ்வாறிருப்பினும் இவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம் - என்றார். (எ)

# இலத்திரனியல் நீதிமன்ற கருத்திட்டம் முதல் கட்டம் உயர்நீதிமன்றில் ஆரம்பம்

கொழும்பு, செப். 14

நீதிமன்ற சேவையின் செயல்பாடுகளை மேம்படுத்தி பொது மக்களுக்கு வினைத்திறனான நீதிமன்ற சேவையை வழங்கும் நோக்கில் நீதிமன்ற கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்தும் செயல்திட்டத்தின் முதற் கட்டமாக உயர்நீதிமன்ற நடவடிக்கைளை டிஜிற்றல் மயமாக்கும் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'இலத்திரனியல் நீதிமன்றம்' கருத்திட்டத்தின் முதல் நடவடிக்கையாக உயர்நீதிமன்றத்தின் வழக்கு முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட வலையமைப்பை திறந்து வைத்தல் நிகழ்வு பிரதம நீதியரசர் பி. பி. சூரசேனவின் தலைமையில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பங்குபற்றலுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதேவேளை மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் உட்பட நீதிமன்ற கட்டமைப்பை நவீனமயப்படுத்தும் செயல்திட்டத்தை வெகுவிரைவில் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# செயற்கை நுண்ணறிவு பயன்பாடு குறித்து அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு செயலமர்வு

கொழும்பு, செப். 14


அரச சேவையை பயனுள்ள மற்றும் செயல்திறனான சேவையாக மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்து அரச நிறைவேற்று அதிகாரிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செயலமர்வு தொடரின் மற்றுமொரு செயலமர்வு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் ஒத்துழைப்புடன் டிஜிற்றல் பொருளாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த செயலமர்வில் அமைச்சுகளின் நிறைவேற்று அதிகாரிகள் பங்கேற்றனர்.

அரச சேவையை டிஜிற்றல் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஆரம்ப பிரவேசமாக, அரச அதிகாரிகளை அறிவூட்டுதல் மற்றும் தயார்படுத்துதல் மற்றும் அரச சேவைக்குள் செயற்கை நுண்ணறிவு குறித்த சாதகமான அணுகுமுறையை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச சேவை டிஜிற்றல் பரிமாற்றத்துக்குத் தயாராக வேண்டும் என்றும் அதற்காக தற்போதுள்ள அரச சேவை மாற வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமநாயக்க தெரிவித்தார். (எ)

# காணாமல்போன ஆட்கள் பற்றி மட்டக்களப்பில் விசாரணைகள்



மட்டக்களப்பு, செப். 14

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் மட்டக்களப்பு பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி - பிரதேச செயலகத்தில் குறித்த ஆணைக்குழுவின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் வாழைச்சேனை, கிரான், வாகரை, செங்கலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 35 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகை தந்த 33 பேரிடம் விசாரணைகள் நடைபெற்றன.

காணாமல்போன ஆட்களின் உறவினர்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து காணாமல்போன ஆட்கள் பற்றிய கொழும்பு பிராந்திய அலுவலகத்தில் இருந்து வருகை தந்த வடிவேல் கிருஷ்ணமூர்த்தி மற்றும் தம்பிஜயா யோகராஜா ஆகியோர் தலைமையிலான அலுவலக உத்தியோகத்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ)

# அடுத்த ஆண்டுக்கான பாடசாலைச் சீருடையை மானியமாக வழங்குவதற்கு சீன அரசு இணக்கம்

கொழும்பு, செப். 14

2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை துணிகளை மானியமாக வழங்க சீன அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

அதன்படி அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளைச் சேர்ந்த 44 இலட்சத்து 18 அயிரத்து 404 மாணவர்களுக்கு 2026 ஆம் ஆண்டுக்கான சீருடைகளை வழங்குவதற்கான ஒப்பந்தச் சான்றிதழ்களை பரிமாறிக் கொள்ளும் அதிகாரபூர்வ விழா நேற்று முன் தினம் பத்தரமுல்லை - பெலவத்தையில் உள்ள கல்வி அமைச்சில் நடைபெற்றது.

கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன மற்றும் சீனத் தூதுவர் கி சென்ஹொங் ஆகியோர் இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கினர்.

இந்த ஒப்பந்தம் தொடர்பான சான்றிதழ்கள் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ மற்றும் சீனத் தூவர் கி சென் ஹொங் ஆகியோரிடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன, "2025 ஆம் ஆண்டுக்காக சீனா இலங்கைக்கு ரூ.5.17 பில்லியன் மதிப்பிலான 11.82 மில்லியன் மீற்றர் சீருடை துணியை நன்கொடையாக வழங்கி, 4.6 மில்லியனுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயனளித்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கும் இதே போன்ற பங்களிப்பை வழங்கும் சீனாவின் உறுதி, இரு நாடுகளின் நட்பை மேலும் வலுப்படுத்தும்" என குறிப்பிட்டார். (அ)

# பிரதேச சபை தவிசாளரை கைது செய்ய பிடியாணை

மாத்தறை, செப். 14

வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் லசந்த விக்கிரம சேகரவை கைது செய்ய மாத்தறை பிரதான நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்தறை பிரதான நீதிவான் சதுர திஸநாயக்க முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியிலிருந்து வெலிகம பிரதேச சபைக்குப் போட்டியிட்ட தாரக நாணயக்காரவை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (எ)

# மரத்தில் மோதி பேருந்து விபத்து



கொழும்பு, செப். 14

மொறட்டுவை, ராவதாவத்தை பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை பேருந்து ஒன்று மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

அத்தோடு, வீதியோரம் இருந்த இரும்புக் கம்பியுடனும் மோதியது.

இந்த விபத்தில் பேருந்தின் முன்பகுதி பாரியளவில் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தடுப்பு காவலிலுள்ள பெக்கோ சமனின் உதவியாளர் கைது

கொழும்பு, செப். 14

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர் பெக்கோ சமனின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி - 56 ரக துப்பாக்கி, 2 மெகசின்கள், 98 தோட்டாக்கள் மற்றும் இராணுவச் சீருடையுடன் குறித்த நபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள எம்பிலிப்பிட்டிய, கங்கேயாய பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# வத்தேகம நகர சபையின் முன்னாள் தவிசாளர் கைது

கண்டி, செப். 14

வத்தேகம நகர சபையின் முன்னாள் தவிசாளரும் அவரது நெருங்கிய நண்பரும் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு ஜீப் வாகனங்களுடன் பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டனர்.

58 வயதுடைய வத்தேகம நகர சபையின் முன்னாள் தவிசாளர் ரவீந்திர குமார மற்றும் 38 வயதுடைய அவரது நெருங்கிய நண்பரான லக்ஷித மனோஜ் என்ற வர்த்தகருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.09.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவின் அக்கறை மட்டும் போதாது

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ரெலோ, இந்தியத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றது. ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா அதிக அக்கறையாக இருப்பதாக, சந்திப்பின் போது இந்தியத் தூதுவர் குறிப்பிட்டதாக ரெலோ தெரிவிதிருக்கின்றது. இந்தியாவின் அக்கறையும் அந்த அக்கறையின் எல்லைக் கோடும் தமிழர் பரப்பிற்கு புதிது அல்ல. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரிலும், இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தியா அதன் அக்கறையை வெளிப்படுத்துவது இதுதான் முதல் தடவையல்ல - இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்து இந்தியாவின் கரிசனையின் எல்லைக் கோடும் மிகவும் தெளிவானது. அந்த அடிப்படையில்தான் யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து இந்தியா அதன் தலையிடும் எல்லை தொடர்பில் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறிவந்திருக்கின்றது. தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பின் போதான ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இந்த விடயம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. தற்போது இலங்கை விவகாரங்கள் தொடர்பான இணையனுசரணை நாடுகளும் அரசியலமைப்பின் பதின்மூன்று தொடர்பிலும், மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் அழுத்திக் குறிப்பிட்டிருக்கின்றன.

இந்த விடயம் பேரவையின் பிரேரணையின் முகப்பில் வருகின்றதா செயல்பாட்டு பந்திகளில் வருகின்றதா என்பதல்ல முக்கியமானது - விடயத்தின் மீதான கரிசனை என்பதுதான் முக்கியமானது. பிரேரணையில் என்ன கூறப்பட்டாலும் அனைத்துமே பரிந்துரைகள் மட்டும்தான். அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு எவ்வித நிர்பந்தங்களும் இல்லை. நாடுகளின் இறைமை என்னும் ஒற்றைச் சொல்லை முன்னிறுத்தி ஐ.நாவின் பரிந்துரைகளை புறம் தள்ளவும் காலத்தை இழுத்தடிக்கவும் அரசாங்கங்களால் முடியும்.

இதனை புரிந்து கொள்ளாமல் விவாதங்கள் செய்வதில் பயனில்லை. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் கூட, அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தாண்டிப் பயணிக்க முடியவில்லை என்பதிலிருந்து விடயங்கள் கணிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்தியாவின் அக்கறையை விட தமிழர்களின் அக்கறை அதிக முக்கியமானது. தமிழர் அரசியல் தரப்புகளுக்கு அக்கறையில்லாதபோது, இந்தியாவின் அக்கறை, வெறும் அக்கறை என்னும் நிலையை தாண்டி ஒருபோதும் பயணிக்காது. இந்தியாவும் அதன் பங்கிற்கு சொல்ல வேண்டியதை அவ்வப்போது சொல்லிவிட்டு அமைதியாக இருந்துவிடும்.

இங்கு கவனிக்க வேண்டிய இன்னொரு விடயமும் உண்டு. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையை முன்வைத்து ஆண்டுகள் தோறும் வாதங்கள் புரிவோர் - தங்களின் வித்துவத்தை காண்பிக்க முன்வருவோர், மனித உரிமைகள் சார்ந்த விடயமும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் வேறு வேறு விடயமாக இருப்பதை இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள் எவருமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று வருகின்ற போது அதனை வேறு விதமாகவே நோக்குகின்றனர். இணையனுசரணை நாடுகள் கூட அரசியலமைப்பின் பதின் மூன்று தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்துவதற்கு பின்னாலுள்ள அடிப்படையான காரணம் இதுதான். தமிழ் மக்களுக்கு வடக்கு, கிழக்கை இணைத்து, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வழங்குமாறு ஏன் இதுவரையில் கூறவில்லை. ஆகக் குறைந்தது ஒரு முறை கூட அதனை உச்சரிக்கவில்லை? மனித உரிமைகள் தொடர்பான அவர்களது கரிசனையும், அரசியல் தீர்வு தொடர்பான பார்வை ஒன்றல்ல, என்பதுதான் இதற்கான பதில்.

# பயிர்க் காப்புறுதி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துக

## விவசாய போதனாசிரியர்களுக்கு அறிவுறுத்தல்

*யாழ்ப்பாணம், செப். 14*



விவசாயிகளுக்கு பயிர்க் காப்புறுதி தொடர்பில் சரியான விழிப்புணர்வை ஏற் படுத்த வேண்டிய பொறுப்பு விவசாய போத னாசிரியர்களுக்கு உள்ளது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையால் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் பயிர்க்காப்புறுதி தொடர்பாக விவசாய துறைசார் உத்தியோகத்தர்களுக்கான தெளிவு படுத்தும் கலந்துரையாடல் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற் றது.

இதில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் மேலும் கூறுகையில், கடந்த மாதம் நடைபெற்ற விவசாய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய விவசாய காப்புறுதி தொடர்பாக அத்துறைசார் உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டும் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், எமது மாவட்ட பொதுமக்களின் பொருளாதார நடவடிக்கைகள் பெரும்பாலும் விவசாய துறை சார்ந்ததாக இருப்பதனால் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் விவசாயிகளின் நலன் சார்ந்ததாக செயல்பட வேண்டும். விவசாயிகளுக்கு பயிர்க் காப்புறுதி தொடர்பில் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு விவசாய போதனாசிரியர்களுக்கு உள்ளது. இவர்களுடன் இணைந்த வகையில் கிராம மட்டத்தில் கடமையாற்றும் பெரும்பாக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டுமென அரசாங்க அதிபர் கூறினார்.

இதன்போது, பயிர்க் காப்புறுதி தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்கள மாவட்ட பிரதிப் பணிப்பாளர், விவசாயக் காப்புறுதி சபையின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் மற்றும் விவசாயத்துறை சார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ)

# 3.45 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் கைதானார்

*கொழும்பு, செப். 14*

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பெருந்தொகை வெளிநாட்டு சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் சனிக்கிழமை காலை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், கல்முனை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குவைத்திலிருந்து அதிகாலை 04. 40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, பயணப் பொதியிலிருந்து ‘மான்செஸ்டர்’ ரக 23 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்கள் அடங்கிய 115 சிகரெட் காட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

3. 45 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பொரளை துப்பாக்கிச் சூடு: முக்கிய சந்தேகநபர் கைது

*கொழும்பு, செப். 14*


கொழும்பு, பொரளை பொலிஸ் பிரிவில் உள்ள சஹஸ்புர சிறிசர உயன விளையாட்டு மைதானத்தில் இரண்டு பேரை சுட்டுக் கொன்ற சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 10 கிராம் 710 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டு தமன பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

07.08.2025 அன்று பொரளை பொலிஸ் பிரிவில் உள்ள சஹஸ்புர சிறிசர உயன விளையாட்டு மைதானத்தில் இரண்டு பேரை சுட்டுக் கொன்று மூவரைக் காயப்படுத்திய குற்றம் குறித்து ஜயவர்த்தனபுர பொலிஸ் விசேட அதிரடிப்படையின் விசேட சுற்றிவளைப்பு பிரிவு விசாரணைகளை மேற்கொண்டது.

இதன்படி, நேற்று முன்தினம் மதியம் தமன பொலிஸ் பிரிவில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரை அதிகாரிகள் கைது செய்தனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பத் தடுப்பு செயல்திட்டம் அவசியம்!

**பேராசிரியர் தி. ஜெயராஜசேகர்**

வெப்ப அலையின் காரணமாக உடலில் இருந்து வியர்வை வெளியேறுவதில் ஏற்படும் பாதிப்பு, தோலில் ரத்த ஓட்டம் குறைதல் முதியோர்களிடையே ஏற்படும் உயிரிழப்புக்கு காரணங்களாக அமைகின்றன. 1990-ஆம் ஆண்டை ஒப்பிடும்போது உலக அளவில் வெப்ப அலையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை தற்போது 85 வீதம் அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார மையம் கூறுகிறது.

வியர்வை வெளியேறும் திறன் குறைந்தால் முதியோர்களுக்கு வெப்ப அயர்ச்சி (ஹீட் ஸ்ட்ரஸ்), அதிவெப்பத்துவம் (ஹைப்பர் தர்மியா), வெப்ப வாதம் (ஹீட் ஸ்ட்ரோக்), வெப்பச் சோர்வு (ஹீட் எக்ஸாஷன்) போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். இதய நோய், சிறுநீரக நோய், மனநலப் பிரச்னைகள் கொண்ட முதியவர்களின் நோய் தீவிரத்தை வெப்பநிலை உயர்வு அதிகப்படுத்துகிறது.

தாக உணர்வு குறைதல் மற்றும் குறைவான திரவம் உட்கொள்ளல், உடல் நீர் குறை (டீஹைட்ரேஷன்), மின்பகுதி சம சீர்கேடு (எலக்ட்ரோலைட் இம்பேலன்ஸ்), சிறுநீரக பாதிப்பு, வெப்பச் சோர்வு (ஹீட் எக்ஸாஷன்) போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

கிராமப்புறங்களில் வாழும் குறைந்த வருமானம் கொண்ட வயது முதிர்ந்த பெண்கள் குடும்பப் பராமரிப்பு, காற்றோட்டம் இல்லாத வீடுகள், வளங்களை அணுகுவதில் உள்ள பாலின பேதம் ஆகியவற்றின் காரணமாக அதிகரிக்கும் வெப்பத்தால் பாதிக்கப்படுகின்றனர். ஆண்களை ஒப்பிடும்போது குளிரூட்டப்பட்ட அறைகளின் குறைந்த பயன்பாடு, காற்றோட்டம் இல்லாத சமையலறைகள், சமூக தனிமைப்படுத்துதல் போன்றவை வெப்பப் பாதுகாப்பு, பராமரிப்பில் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் உள்ள வயதான ஆண்கள் விவசாயம், கட்டுமானம் போன்ற தொழிலில் மிக நீண்ட நேரம் ஈடுபடுவதால் வெப்பத் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்றனர். தகவமைக்க இயலாத முதியோர் உடல் நிலை, வெப்பமண்டலப் பகுதிகளில்



நிலவும் இரவு நேர வெப்பத்தால் பாதிப்படைகிறது.

20 டிகிரி செல்சியஸ்க்கு மேல் உயரும் வெப்பநிலையால் முதியோரின் உடல் குளிர்விக்கும் திறன் பாதிப்படைகிறது. தொடர்ச்சியான வெப்ப இரவுகள் முதியோருக்கு வெப்பம் சம்பந்தப்பட்ட உடல் பிரச்னைகளை ஏற்படுத்துகிறது. இதய மற்றும் சுவாச மண்டலங்களில் பிரச்னைகளை ஏற்படுத்துகிறது.

குறைந்த உடல் இயக்கம், தனிமை மற்றும் சமூக உறவுகள் இல்லாமை முதியோர்களின் மன மற்றும் உடல் நலத்தைப் பாதிக்கின்றன. அதீத வெப்பம் முதியோரைத் தனிமைப்படுத்துகிறது. தனியாகவும் மிகக் குறைந்த குடும்ப உறவுகளுடனும் வாழும் முதியவர்கள் நோய்வாய்ப்படும் போது உதவி பெறுவதில் பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக அதிகமான இறப்புகள் ஏற்படுகின்றன.

வெப்பம் சம்பந்தப்பட்ட மரணங்களைக் கண்காணித்தல், இடர் வரைபடம் வரைதல், பாதிக்கப்பட்ட மக்கள் வாழுமிடங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல் போன்றவை வெப்பத் தடுப்பு செயல்திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

வானிலை ஆய்வுத் துறை, சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் இணைந்து வானிலை தொடர்பான செயலிகளை ஒருங்கிணைத்து ஒரே பயன்பாட்டுச் செயலியாக உருவாக்குவதன் மூலம் ஒருங்கிணைந்த வெப்ப அலை முன்னெச்சரிக்கை அமைப்பை உருவாக்க முடியும்.

இந்தப் பயன்பாட்டுச் செயலி வெப்ப அலை எச்சரிக்கை, வானிலை நிலவரம், வானிலை முன்னறிவிப்பு, மழைப் பதிவு, நிலநடுக்கம், போன்ற காலநிலை சம்பந்தப்பட்ட விரிவான தகவல்களை வழங்க வேண்டும். முன்னெச்சரிக்கை அறிவிப்புகளுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும்.

வெப்பத்தின் தாக்கம் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்த தரவுகளில் முரண்பாடுகள் உள்ளன. 2009-2022-ஆம் ஆண்டுகளுக்கிடையில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய தரவு கணக்கீட்டைவிட 4000 பேர் அதிகமாக மரணம் அடைந்திருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் கூறுகிறது. முரண்பட்ட தரவுகள் வழங்கி உள்ள இரு அமைப்புகளும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.

வெப்பம் தொடர்பான இறப்புகள் உள்பட காரணங்களுடன் கூடிய இறப்புத் தரவுகளை வெளியிட உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுகாதாரத் துறை அனுமதி வழங்கும் போது, வெப்பத்தால் இறப்போரின் சமுதாய, பொருளாதார, தொழில் பின்புலங்களையும் எளிதில் அடையாளம் காணலாம் என்கின்றனர் வல்லுநர்கள்.

பொது சுகாதாரத் துறை கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை வலுப்படுத்தும் கொள்கைகளை அரசு வகுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை வெப்பம் தொடர்பாக முதியோர்களிடையே ஏற்படும் நோய்கள் மற்றும் இறப்புகள் ஏற்படுத்தியுள்ளன. அதிகரித்துவரும் வெப்பநிலை அச்சுறுத்தலைச் சமாளிக்க குறுகிய கால நடவடிக்கைகளில் இருந்து நீடித்த நீண்ட கால திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 07.09.2025 - 13.09.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 22
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பௌர்ணமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் பல நாட்களாக திருமணத்திற்கு வரன் தேடும் நிகழ்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட்டு, திருமண ஆசைகள் நிறைவேறும். புது ஆடை ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். தொழில் துறையினர் தங்கள் வளர்ச்சிக்கு அதிக மூலதனங்களை போட வேண்டியது வரும். தீய நடவடிக்கையில் ஈடுபடும் நண்பர்களை கண்காணிப்பது நல்லது. வியாபாரத்தில் அகலக்கால் வைக்காமல் அடக்கி வாசித்தல் மூலம் இழப்பைத் தவிர்க்கலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் ஏற்றம் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் முன்னர் ஏற்பட்ட பிரச்சனைகள் தீர்ந்து, வீட்டில் அமைதி நிலவும். பெற்றோரின் உடல் நிலையில் அதிக அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். எச்சரிக்கையுடன் முதலீடு செய்யுங்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் என வீசும். தாமதமானாலும், மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர் கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளைச் செல்வம், துள்ளி விளையாடும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். உழைப்பு அதிகமாக அதற்கு ஏற்ப போதுமான ஊதியம் இருக்காது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவு அதிகரிக்கும். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். பிரயாணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் இனிய சேவைகள் மூலம் சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ், கௌரவம் உயரும். சிலருக்கு எதிரிகள் பணமும் வந்து சேரும். அதன் காரணமாக வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். அரசு வகையில் கட்ட வேண்டிய வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், ஆகியன ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். நீண்ட காலத்திற்குப் பிறகு, ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பிறர் மேல் இரக் கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நீங்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு, விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகம், ஆடை ஆபரண சேர்க்கை, எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். சிலருக்கு தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங் கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைப்பேறு, தடைப்பட்டிருந்த புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். தொழிலாளர்களை அனுசரித்து சென்றால், உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். பிரச்ச னைகளை குறைக்க குடும்பத்தில் மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அடுத்தடுத்து ஆட்சியாளர்களை அடித்துவிரட்டும் தெற்காசிய மக்கள் கிளர்ச்சிகள்!



வீரகத்தி தனபாலசிங்கம்

தெற்காசியாவில் மூன்று வருடங்களில் மூன்று அரசாங்கங்களை மக்கள் கிளர்ச்சிகள் பதவி கவிழ்த்திருக்கின்றன. முதலாவதாக, 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் 'அறகலய' மக்கள் கிளர்ச்சி ராஜபக்ச ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது. இரண்டாவதாக, 2024 ஆகஸ்டில் பங்களாதேஷ் மக்கள் கிளர்ச்சி பிரதமர் ஷேய்க் ஹசீனாவின் அரசாங்கத்தை பதவி கவிழ்த்தது. மூன்றாவதாக, கடந்த வாரம் அதே போன்ற மக்கள் கிளர்ச்சி நேபாளத்தில் பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் அரசாங்கத்தை வீழ்த்தியிருக்கிறது.

இலங்கையினதும் பங்களாதேஷினதும் கிளர்ச்சிகளின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் ஷேய்க் ஹசீனாவும் நாட்டை விட்டு தப்பியோடினார்கள். ஆனால், கடந்த வாரம் பதவியில் இருந்து விலகிய நேபாளப் பிரதமர் இராணுவத்திடம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டார். நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய சில வாரங்களில் நாடுதிரும்பிய அதேவேளை, ஷேய்க் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கிறார். அவரை பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் விசாரணைக்கு உட்படுத்துவதற்காக நாடுகடத்துமாறு பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்ற போதிலும், இந்தியா அதற்கு இணங்குவதற்கான சாத்தியங்கள் இல்லை.



இலங்கையில் மக்கள் கிளர்ச்சிக்கு இரு வருடங்களுக்கு பிறகு நடைபெற்ற தேசிய தேர்தல்களில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மக்களின் பேராதரவுடன் பதவிக்கு வந்ததன் மூலம் அதிகார மாற்றம் அமைதியான முறையில் இடம்பெற்றது. அந்த மாற்றம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் இடதுசாரிக்கட்சி ஒன்று ஜனநாயக தேர்தல்கள் மூலம் முதன் முதலாக அதிகாரத்தைக் கைப்பற்றிய 'சாதனையாக' பதிவாகியிருக்கிறது. பங்களாதேஷில் நோபல் சமாதானப் பரிசாளரான முஹம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் அடுத்த வருடம் பாராளுமன்ற தேர்தலை நடத்தவிருக்கிறது. கடந்த வாரத்தைய கிளர்ச்சியை அடுத்து நேபாளத்திலும் இடைக்கால அரசாங்கம் ஒன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது.

தெற்காசியாவின் இந்த மூன்று மக்கள் கிளர்ச்சிகளையும் பொறுத்தவரை, பங்களாதேஷிலோ அல்லது நேபாளத்திலோ இடம்பெற்ற படுமோசமான வன்முறைகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் கிளர்ச்சி பெருமளவுக்கு அமைதியான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டது. ஆனால், தெற்காசியப் பிராந்தியத்தில் மக்கள் கிளர்ச்சி மூலம் அரசாங்கத்தை கவிழ்த்த முதல் நாடாக இலங்கை வரலாற்று முக்கியத்துவம் ஒன்றைக் கொண்டிருக்கிறது.

சகல கிளர்ச்சிகளிலும் மாணவர்களும் இளைஞர்களுமே முன்னரங்கத்தில் நிற்பது இயல்பு. ஆனால், கடந்த வாரத்தைய நேபாளக் கிளர்ச்சியில் இளைஞர்களின் பங்கேற்பு முன்னென்றும் இல்லாத வகையில் ஒரு குறிப்பிட்ட தலைமுறை இளைஞர்களின் போராட்டமாகவே முதலில் அடையாளப்படுத்தப்பட்டது. 1900 களின் பிற்பகுதிக்கும் 2010 களின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த இளைஞர்கள் 'இஸற்' தலைமுறையினர் என்று வர்ணிக்கப்படுகின்றனர் . குறிப்பாக 1997 ஆம் ஆண்டுக்கும் 2012 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்குதியில் பிறந்த இவர்கள் 13 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

நேபாளத்தில் இடம்பெற்ற கிளர்ச்சி 'ஜென் இஸற் இயக்கம்' (Gen. Z movement) என்றே பிரபல்யமாக அழைக்கப்படுகிறது. அந்த தலைமுறையினரின் சார்பில் பரந்தளவிலான அரசியல் சீர்திருத்தங்களை வேண்டிநிற்கும் 'ஹமி நேபாள்' (நாங்கள் நேபாளியர்கள்) என்ற இயக்கமே போராட்டத்துக்கு தலைமை வகித்தது. நேபாளம் ஆர்ப்பாட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் புதிய நாடு அல்ல. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலமாக மாவோவாத கம்யூனிஸ்டுகளின் ஆயுதப் புரட்சியினால் பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் நேபாளம் சந்தித்தது.

ஆனால், குறிப்பிட்ட வயதைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் நேபாளத்தின் வீதிகளில் தற்போது எதற்காக இறங்கினார்கள்?

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) தலைமையிலான அரசாங்கம் சகல சமூக ஊடகங்களையும் (2023 சமூக ஊடக பயன்பாட்டு ஒழுங்கு விதிகளின் கீழ்) ரெலிகோம் அதிகார சபையில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒருவார காலக்கெடு விதித்து ஆகஸ்ட் 28 ஆம் திகதி அறிவித்தது. முக்கியமான சமூக ஊடகளில் எதுவும் அந்த அறிவிப்பை கருத்தில் எடுக்காத நிலையில் செப்டெம்பர் 4 ஆம் திகதி அரசாங்கம் (முகநூல், எக்ஸ், வட்ஸ்அப் உட்பட) 26 சமூக ஊடகங்களை தடைசெய்தது. சுமார் மூன்று கோடி சனத்தொகையை கொண்ட நேபாளத்தில் ஒரு கோடியே 65 இலட்சம் பேர் இணையத்தை பயன்படுத்துகிறார்கள் என்று கூறப்படுகிறது.

> **முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவந்த மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் தலைவர்களின் ஆட்சிகளினால் நேபாள மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாமல் போனமையையும் இறுதியில் அவர்களுக்கு எதிராகவே மக்கள் கிளர்ந்தெழுந்து அதிகாரத்தில் இருந்து அவர்களை விரட்டியிருப்பதையும் 'அறகலய" மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து தேர்தல்களில் வெற்றி பெற்று பதவிக்குவந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கவனத்தில் எடுப்பது அவசியம்.**


சமூக ஊடகங்கள் மீது அரசாங்கம் விதித்த தடையை மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் ஒரு தணிக்கையாகவும் தகவல்களைப் பெறுவதற்கான ஒரு கட்டுப்பாடாகவுமே பார்த்தார்கள். சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் இணையத்தை பெருமளவுக்கு பயன்படுத்துகின்ற ஒரு நாட்டில் இத்தகைய தடைவிதிப்பு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் முன்கூட்டியே சிந்தித்துப் பார்க்கவில்லை.

செப்டெம்பர் 8 ஆம் திகதி வீதிக்கு இறங்கிய இளைஞர்களின் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் எடுத்த நடவடிக்கைகளில் 19 பேர் பலியானதுடன் நூறுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தார்கள். அதையடுத்து தலைநகர் காத்மாண்டுவில் மாத்திரமல்ல, நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள்.

செப்டெம்பர் 9 ஆம் திகதி சமூக ஊடகங்கள் மீதான தடையை அரசாங்கம் நீக்கிய போதிலும் போராட்டங்கள் தணியவில்லை. நேபாளத்தில் கடந்தகாலப் போராட்டங்களின்போது இடம்பெறாத அளவுக்கு படுமோசமான வனமுறைகள் கடந்த வாரம் இடம்பெற்றன. அரசியல் தலைவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. பாரளுமன்றம், ஜனாதிபதி மாளிகை, உயர்நீதிமன்றம் உட்பட பெருவாரியான அரசாங்கச் சொத்துக்களுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தார்கள். சமூக ஊடகங்கள் மீதான தடைக்கு எதிராக இளைய தலைமுறையினர் அமைதியான முறையில் முன்னெடுத்த போராட்டம் இறுதியில் அரசாங்கத்தை கவிழ்த்த மாபெரும் மக்கள் வன்முறைக் கிளர்ச்சியாக மாறியது.

வன்முறைகள் தீவிரமடைந்து சிறையுடைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன. ஆனால், நேபாள இராணுவம் ஓரிரு நாட்களில் அராஜக நிலைவரத்தை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தது. கடந்த வார வன்முறைகளில் குறைந்தது 51 பேர் பலியானதாகவும் பல நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்தாகவும் செய்திகள் தெரிவித்தன. முன்னாள் பிரதமர் ஒருவரின் மனைவி உயிருடன் எரிக்கப்பட்ட கொடூரச் சம்பவமும் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களான நேபாள கம்யூனிஸ்ட் (ஐக்கிய மார்க்சிஸ்ட் -- லெனினிஸ்ட்) கட்சியின் தலைவர் (பிரதமர்) கே.பி. சர்மா ஒலி, நேபாள காங்கிரஸ் கட்சி தலைவர் ஷெர் பகதூர் டியூபா மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் (மாவோவாத நிலையம்) கட்சியின் தலைவர் பிரசண்டா ஆகியோருக்கு எதிராக ஏற்கெனவே கடுமையாக ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருந்தன. கோட்பாடுகளை பொறுத்தவரை, பெருமளவுக்கு ஒத்துப் போகாத இந்த தலைவர்களை ஊழலே பிணைத்து வைத்திருந்தது என்று கூட விமர்சனங்கள் வெளியாகின.



ஆட்சியாளர்களின் குடும்பங்கள் ஆபாசத்தனமான ஆடம்பரத்தில் வாழ்வதைக் கண்டு கொதித்துக் கொண்டிருந்த இளைஞர்களும் மக்களும் அரசாங்கத்தை விரட்டுவதற்கு எடுத்த முடிவை எவராலும் தடுக்க முடியவில்லை. முடியாட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசியல் தலைவர்கள் ஜனநாயகத்தை குடும்ப அதிகாரமாகவும் ஆட்சிமுறையை தனிப்பட்ட நலன்களுக்கான சாதனமாகவும் மாற்றியதைக் கண்டு சீற்றமடைந்த ஒரு தலைமுறையின் முழக்கம் நேபாளத்தை உலுக்கியிருக்கிறது.

நேபாள அரசியல் தலைமைத்துவம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டாட்சி (சமஷ்) ஜனநாயக குடியரசின் புதிய அரசியல் முறைமை மக்கள் மத்தியில் பெருமளவு எதிர்பார்ப்புக்களை தோற்றுவித்தது. ஆனால், இறுதியில் மக்கள் அரசியல் உறுதிப்பாடின்மை, மந்தமான பொருளாதார வளர்ச்சி மற்றும் ஊழலையே சந்தித்தார்கள். கடந்த 15 வருட காலப்பகுதியில் நேபாளத்தில் 17 அரசாங்கங்கள் பதவியில் இருந்தன. மாவோவாத ஆயுதக்கிளர்ச்சிக்கு தலைமைதாங்கிய தலைவர்களும் மற்றைய கம்யூனிஸ்ட் தலைவர்களும் கூட பிரதமர்களாக பதவி வகித்திருக்கிறார்கள். ஆனால், அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் பெரிய வெளி இருந்தது.

முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவந்த மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் தலைவர்களின் ஆட்சிகளினால் நேபாள மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாமல் போனமையையும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் பெருமளவில் கலந்தாலோசனை நடத்தவேண்டியது அவசியம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

2009 ஆம் ஆண்டில் இராணுவக் களத்தில் போர் கொடூரமான முறையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதற்கு பிறகு இலங்கை சர்வதேச சமூகத்தின் தலையீட்டுடன் கூடிய நுண்ணாய்வுக்கு திரும்பத்திரும்ப அதிகரித்த வகையில் உள்ளாகிவந்திருக்கிறது. சர்வதேச சமூகத்தின் அந்த போக்கு இலங்கை அரசாங்கங்களை தற்காப்பு நிலையில் பிரதிபலிப்புக்களை வெளியிட வேண்டிய நிலைக்கு தள்ளியிருந்தன. இந்த வருடமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் வித்தியாசமானதாக இல்லை. பொறுப்புக் கூறும் கடப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் புதிய வலியுறுத்தல்களை காணக்கூடியதாக இருக்கிறது.

ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் 60 வது கூட்டத்தொடரில் இலங்கையை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். சகல இலங்கையர்களினதும் உரிமைகளையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதற்கான அதன் செயற்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அவகாசத்தையும் இடைவெளியையும் தருமாறு அரசாங்கம் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அரசாங்கம் "முறைமை மாற்றத்துக்காக" அதற்கு மக்களிடமிருந்து கிடைத்த ஆணையை பொறுப்புணர்வுடன் நோக்குகிறது. அதன் காரணத்தினால் போலும் அரசாங்கம் தோல்வி கண்டவர்களாகவும் கடந்தகால கறைகளைக் கொண்டவர்களாகவும் மற்றைய தரப்புக்களை கருதி அவர்களுடன் கலந்தாலோசனைகளை நடத்துவதற்கு தயங்குகிறது. அது உள்ளக கலந்தாலோசனைகளை மாத்திரம் நடத்தி தீர்மானங்களை எடுக்கிறது என்று தெரிகிறது. இந்த நிலைவரம் ஒருதலைப்பட்சமானதும் மேலிருந்து கீழ் நோக்கியதுமான தீர்மான நடைமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்கினது என்ற ஒரு எண்ணத்தை தோற்றுவித்திருக்கிறது.

சகல குடிமக்களும் சமத்துவமானவர்கள் என்பதும் அவர்கள் அரசினால் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்பதுமே அரசாங்கத்தின் தத்துவார்த்த நிலைப்பாடாக இருக்கிறது. பொருளாதாரத்தை மீட்டெடுத்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, ஊழல், தண்டனையின்மை மற்றும் வளங்களின் தவறான முகாமைத்துவத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான செயற்பாடுகளுடன் சேர்த்து இனப்பிரச்சினைக்கான தீர்வும் அரசாங்கத்தின் முன்னுரிமைக்கான மூன்று விடயங்களாக அமைகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்னதாக ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க வடக்கின் தலைநகர் யாழ்ப்பாணத்தில் இரு தினங்களை செலவிட்டார். மாணவர்கள், குடும்பங்கள் உட்பட வடபகுதி மக்களுடன் அவர் மகிழ்ச்சியாக ஊடாட்டங்களைச் செய்த காட்சிகளை ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. பல்வேறு அபிவிருத்தி திட்டங்களையும் அவர் அறிவித்தார். கடற்தொழில், உட்கட்டமைப்பு மற்றும் உயர்கல்வி ஆகியவற்றில் புதிய முதலீடுகளும் அவற்றில் அடங்கும். அத்தகைய திட்டங்கள் பல தசாப்தங்களாக அபிவிருத்தியில் பின்தங்கியிருந்த ஒரு பிராந்தியத்தில் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வாய்ப்புக்களைக் கொண்டவையாக இருக்கின்றன.


பொதுவில், நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழும் மக்களைப் போன்றே வடபகுதி மக்களும் தொழில் வாய்ப்புகளையும் செல்வத்தையும் தோற்றுவிக்கின்ற எந்த வடிவிலான அபிவிருத்தி முன்முயற்சிகளையும் வரவேற்பார்கள். ஆனால், அபிவிருத்தி மாத்திரம் தமிழ் மக்களின் அடிப்படை மனக்குறைகளைக் கையாளுவதற்கு போதுமானவையாக ஒருபோதும் இருக்கவில்லை. அபிவிருத்தி என்பது சகல தரப்புகளையும் அரவணைக்கின்ற அரசியல் மற்றும் நீதியுடன் ஒருங்குசேர முன்னெடுக்கப்படாத பட்சத்தில் அது வெறுமனே அடையாள பூர்வமானதாக அல்லது திணிப்பாக நிராகரிக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கிறது.

அபிவிருத்தியை பொறுத்தவரை, வடக்கும் கிழக்கும் புறக்கணிக்கப்பட்டமை இலங்கை அரசிடமிருந்து அன்னியப்பட்ட தமிழ் மக்களின் உணர்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆனால், உத்தேச சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்காக மண்டைதீவின் தெரிவும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக கச்சதீவின் தெரிவும் பிரச்சினைக்குரியவை.

உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பைப் பொறுத்தவரை பெறுமதியானவை என்று கருதப்படுகின்ற சதுப்புநிலத் தாவரங்களையும் கடற்பாசிகளுடனான ஆழமற்ற கடலையும் கொண்ட மண்டைதீவை விடவும் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு மிகவும் பொருத்தமான குறிப்பாக நாட்டின் ஏனைய பாகங்களை பிரதான நெடுஞ்சாலைக்கு அண்மையான இடங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன.

மதவழிபாட்டுக்குரிய இடமாகவும் பரப்பளவில் மிகவும் சிறியதாகவும் இருக்கும் கச்சதீவு சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு பொருத்தமான இடம் அல்ல. இதைச் சுட்டிக்காட்டிய யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர், கச்சதீவு யாத்திரைக்கும் பிரார்த்தனைக்கும் உரிய இடமாக தொடர்ந்து விளங்க வேண்டுமே அல்லாமல் வர்த்தக நோக்குடனான சுற்றுலாத்துறைக்கான இடமாக மாற்றப்படக்ககூடாது " என்று கூறியிருக்கிறார்.

இந்த இரு திட்டங்கள் தொடர்பிலும் மூண்டிருக்கும் சர்ச்சை கலந்தாலோசனை ஏன் முக்கியமானதாக இருக்கிறது என்பதை காட்டுகிறது. பல தசாப்தகால இடம்பெயர்வு, இராணுவமயம் மற்றும் வறுமையை அனுபவித்து கடந்து வந்த உள்ளூர்ச் சமூகங்கள் தங்களது நிலங்களின் எதிர்காலத்தையும் வாழ்வாதாரங்களையும் தீர்மானிப்பதற்கான உரிமையை நீண்டகாலமாக கோரி நிற்கின்றன. கலந்தாலோசனையை தவிர்த்து இந்த அரசாங்கமும் தேசிய தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் இருந்து தாங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதாக தமிழர்களையும் முஸ்லிம்களையும் உணரவைத்த முன்னைய அரசாங்கங்களின் மத்தியமயமாக்கல் போக்குகளையே பின்பற்றுவதாக தெரிகிறது.



**ஒளிவுமறைவில்லாத - சகல தரப்பினரையும் அரவணைக்கும் வகையிலான ஒரு பேச்சுவார்த்தைச் செயன்முறையினாலேயே தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியில் மாத்திரமல்ல, சனத்தொகையின் ஏனைய பிரிவினர் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். மக்கள் மத்தியில் துருவமயத்தை தவிர்ப்பதற்கு விரும்பும் அரசாங்கம் இதையே செய்ய வேண்டும்.**

இதன் காரணத்தினால்தான் அதிகாரப்பரவலாக்கல் முக்கியமானதாகிறது. வடக்கிலும் கிழக்கிலும் உயர் நிருவாகப் பதவிகளுக்கு தமிழ், முஸ்லிம் அரசாங்க அதிகாரிகளை நியமிக்க வேண்டியதும் முக்கியமானதாகும். அவ்வாறு செய்வதன் மூலமாக தொலை தூரத்தில் இருந்து வேறுபட்ட பின்புலத்தைக் கொண்டவர்களை விடவும் தாங்களே தங்களது சொந்த தீர்மானங்களை எடுப்பவர்கள் என்ற உணர்வை சம்பந்தப்பட்ட பகுதி மக்களுக்கு ஏற்படுத்த முடியும்.

அரசாங்கம் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னதாக அதன் உறுப்பினர்களுடன் மாத்திரமல்ல, சம்பந்தப்பட்ட விவகாரத்தில் பங்கும் ஈடுபாடும் கொண்ட மற்றைய சகல தரப்புகளுடனும் கலந்தாலோசனை நடத்த வேண்டியது அவசியமாகும். குறிப்பாக, இன, மத சிறுபான்மைச் சமூகங்களுடன் தொடர்புடைய விவகாரங்களில் அத்தகைய பரந்த கலந்தாலோசனை மிகவும் அவசியமாகும்.

யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி திசநாயக்க மேற்கொண்ட நல்லெண்ண விஜயத்தைப் பொறுத்தவரை, அவர் கையாளத்தவறிய இன்னொரு முக்கியமான பிரச்சினை செம்மணி மனிதப்புதைகுழி விவகாரமாகும். வடக்கு, கிழக்கில் மேலும் மேலும் மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவதாக செய்திகள் வருகின்றன. வெளிவருகின்ற சான்றுகள் புதைக்கப்பட்டவர்கள் கொடூரமான முறையிலேயே மரணத்தைச் சந்திந்திருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றன.

கட்டியணைத்த வண்ணம் பெரியவர்களின் எலும்புக் கூடுகளும் சிறியவர்களின் எலும்புக் கூடுகளும் அமர்ந்திருப்பதை போன்ற நிலையில் எலும்புக்கூடுகளும் கண்டெடுக்கப்படுவது மிகவும் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழியை நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சென்று பார்த்தார். ஆனால், அவ்வாறு வடக்கில் செய்யாமல் இருப்பதற்கு ஜனாதிபதி திசநாயக்க தீர்மானித்திருந்தார் போன்று தெரிகிறது. அடையாளபூர்வ முக்கியத்துவமுடைய சில செயற்பாடுகள் அவசியமானவை. விசாரணைகள் மெதுமெதுவாக இடம்பெற்றாலும், அவை குறித்து முரண்பாடான நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டாலும் கூட ஜனாதிபதி செம்மணி புதைகுழிகள் பகுதிக்கு சென்று பார்வையிட்டிருந்தால், பாதிக்கப்பட்டவர்கள் மீது அனுதாபம் காண்பிக்கும் ஒரு செயற்பாடாக அது நோக்கப்பட்டிருக்கும்.

வடக்கின் போர்க்குற்ற பிரச்சினை தெற்கில் உள்ள சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. அவர்கள் போர்வெற்றியை, செலவைப் பற்றி கவலைப்படாமல், நடந்துமுடிந்த நல்ல விடயங்களில் ஒன்றாக கருதுகிறார்கள். அவர்கள் படையினரை "போர் நாயகர்களாக" வர்ணித்து நேர்மறையான வெளிச்சத்திலேயே பார்க்கிறார்கள். அதனால் ஜனநாயக ரீதியில் சிங்கள வாக்குகளில் தங்கியிருக்கும் எந்தவொரு அரசாங்கத்துக்கும் போர்க்குற்றப் பிரச்சினையை கையாளுவது என்பது சவாலான ஒன்றேயாகும்.

மனிதப்புதைகுழிகள் விவகாரத்தைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனுமதித்து தொடர்ந்தும் அகழ்வுப்பணிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நிதி மற்றும் மனித வளங்களை வழங்குகின்ற அதேவேளை, சேகரிக்கப்படுகின்ற சான்றுகளில் தலையீடுகளைச் செய்யாமல் இருப்பதே அரசாங்கத்தின் அணுகுமுறையாக இருக்கிறது.

சர்வதேச விசாரணை நாட்டின் இறைமையை மீறுவதாக அமையும் என்று இலங்கையின் அரசாங்கங்கள் நீண்டகாலமாக வாதிட்டு வந்திருக்கின்றன. சர்வதேச நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கைக்கு பதிலளித்த அரசாங்கம் "வெளி முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற தேசிய முயற்சிகளுக்கு இடையூறாக மாத்திரமே அமையும் என்பதுடன் மக்கள் மத்தியில் பிளவுகளையும் ஏற்படுத்தும" என்று குறிப்பிட்டது. ஆனால், கடந்த காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் எந்தப் பயனையும் கொண்டுவரவில்லை என்பதால் தமிழ் மக்கள் தங்களது அனுபவத்தின் அடிப்படையில் போரில் வெற்றிபெற்ற இராணுவத்தையும் போர்க் குற்றங்களையும் கையாளுவதற்கு உள்நாட்டுப் பொறிமுறைகளில் நம்பிக்கை வைக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

சர்வதேச விசாரணையே தேவை என்பதே தமிழர்களின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது. கடந்த காலத்தில் 2006 ஆண்டில் சர்வதேச சமூகத்தினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் நியமிக்கப்பட்ட முன்னணி பிரமுகர்களின் சர்வதேச சுயாதீனக்குழு (International Independent Group if Eminent Persons - IIGEP), என்ற கலப்பு பொறிமுறை தோல்வியைக் கண்டது. உண்மையை கண்டறியும் செயன்முறைகளில் அவர்களை ஈடுபடுத்துவதில் மெய்யான விருப்பம் இருக்கவில்லை என்பதே அந்த தோல்விக்கு காரணம். மிகவும் அண் மயில் இவ்வருடம் மார்ச் மாதத்தில் கூட " பக்கச்சார்பற்ற நீதியை உறுதிப்படுத்த சுயாதீனமான சர்வதேச பொறிமுறை ஒன்று தேவை" என்று ஐநா ஆணையர் வலியுறுத்தியிருந்தார்.

இரு நிலைப்பாடுகளுக்கும் இடையிலான வெளி அகலமானதாகவே இருக்கிறது. இந்த வெளியை நிரவாத பட்சத்தில், அரசாங்கம் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும், இலங்கை மக்கள் துருவமயப்பட்டவர்களாகவே இருக்கப் போகிறார்கள். அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் என்ற வடிவில் இருக்கின்ற தன்னல அக்கறைச் சக்திகள் தங்களது தனிப்பட்ட எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இந்த முயற்சிகளை குழப்புவார்கள்.

தமிழ் மக்களுடன் அரசாங்கம் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாகவும் நேரடியாகவும் கலந்தாலோசனை செய்யவேண்டும். ஏனைய மக்களுக்கும் அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை விளக்கிக்கூற வேண்டும். தீர்மானங்களை மேற்கொள்வதில் மேலிருந்து கீழ் நோக்கிய செயன்முறை நிலைபேறான நல்லிணக்கத்தை வென்றெடுக்க உதவப்போவதில்லை. ஒளிவுமறைவில்லாத - சகல தரப்பினரையும் அரவணைக்கும் வகையிலான ஒரு பேச்சுவார்த்தைச் செயன்முறையினாலேயே தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியில் மாத்திரமல்ல, சனத்தொகையின் ஏனைய பிரிவினர் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். மக்கள் மத்தியில் துருவமயத்தை தவிர்ப்பதற்கு விரும்பும் அரசாங்கம் இதையே செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிகள் சலுகை நீக்கம் அரசியல் பயங்கரவாதமா?

## அரசியல் கலாசார மாற்றமா?

பனங்காட்டான்

இலங்கை அரசியலில் இரண்டு விடயங்கள் கடந்த வாரம் முக்கியமானவையாக அமைந்தன. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நீதிப்பொறிமுறை மறுப்பும், முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்கும் சட்டம் நடைமுறைக்கு வந்திருப்பதும் இவை.

ஜெனிவாவிலும் கொழும்பிலும் என்னென்ன நடைபெறுமென்று எதிர்பார்க்கப்பட்டனவோ அதுவே நடைபெற்றுள்ளது. ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.)யின் ஆட்சியில் முதல் வருட பூர்த்தி மாதத்தில் இந்த விடயங்கள் இடம்பெற்றுள்ளது வரலாற்றில் இடம்பெறப்போகிறது.

போர்க்கால மனித உரிமை மீறல்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டுமானால்(?) அதற்கு சர்வதேச நீதிப்பொறிமுறை கலந்த பொறுப்புக்கூறல் விசாரணையே தேவையென்பது பாதிக்கப்பட்ட தரப்பின் ஏகோபித்த நிலைப்பாடு. தமிழ் அரசியல் தரப்புகள் தமக்குள் எப்போதும் மோதிக்கொண்டிருந்தாலும், ஜெனிவா விடயத்தில் இப்போது ஒரே கோட்டுக்கு வந்துள்ளன.

அதேபோன்று, சிங்கள அரசியல் தலைமைகளும் அவர்களின் அரசாட்சித் தரப்புகளும் தேர்தல்களின்போது மாறிமாறி கதிரை ஏறினாலும், அரச பயங்கரவாதத்துக்கு துணையாக நிற்கும் தங்கள் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தங்களுக்கான நேர்க்கோட்டில் நின்றே வருகின்றன. இதில் அநுர குமர ஆட்சியும் மாறுபாடில்லை.

மனித உரிமைப் பேரவையின் தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் மனித உரிமை மீறலுக்கு பொறுப்புக்கூறல் செயல்வழியில் ஈடுபட தாங்கள் தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் (தமிழரசுக் கட்சி தனது அறிக்கையில் குறிப்பிட்டதுபோல வெளிநாட்டு அமைச்சர் அல்ல) விஜித ஹேரத் ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.


பேரவையின் அறுபதாவது கூட்டத்தொடர் கடந்த எட்டாம் திகதி ஆரம்பமானபோது மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தமதுரையில், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து இலங்கை அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டதோடு, பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளிலிருந்து மீள்வதற்கான சிறப்பு மிக்க வாய்ப்பை இலங்கை இப்போது பெற்றுள்ளது என்று சுட்டியிருந்தார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்ப்பு என்று மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்ட சொற்பதம் உட்பொருளில் பல அர்த்தங்களை உள்ளடக்கியது. இலங்கையில் முன்னெப்போதும் ஆட்சி புரியாத ஒரு தரப்பு, போர்க் காலத்தில் நேரடியாக சம்பந்தப்படாத ஒரு கட்சி, அரச கெடுபடிகளாலும் வன்முறைகளாலும் ஏற்கனவே பாதிக்கப்பட்ட ஓர் அணி, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்துள்ளதால் நீதிக்கான பொறிமுறைகளால் தீர்க்கமான முடிவுக்கு வர முடியுமென்ற எதிர்பார்ப்பை இது அர்த்தப்படுத்துகிறது.

என்னதான் ஜெனிவாவில் சொன்னாலும், எவ்வகைத் தீர்மானங்களை நிறைவேற்றினாலும் அவைகளை ஏற்று செயற்படுத்தினால் சிங்கள பௌத்தத்தின் ஆதரவை தாங்களும் இழந்து விடுவோம் என்ற மனப்போக்கு அநுர குமர அரசுக்கும் இருக்கிறது. அதனால் எவ்வாறான வாக்கியங்களோடு அறிக்கைகளையும் தீர்மானங்களையும் முன்வைத்தாலும் அவைகளை தாங்கள் பயன்படுத்தத் தயாரில்லை என்பதை அமைச்சர் விஜித ஹேரத்தின் அறிவிப்பு அப்பட்டமாகத் தெரிவிக்கிறது.

பேரவையின் கூட்டத்தில் மட்டுமன்றி மனித உரிமைகள் ஆணையாளருடனான தனிச் சந்திப்பிலும் தமது அரசின் நிலைப்பாட்டை அமைச்சர் ஹேரத் தெரிவித்திருப்பதைக் கவனிக்க வேண்டும். முன்னைய காலங்களைப் போன்று இம்முறையும் பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கான ஆதரவையும், நீதி கோரலையும் பிரிந்து நின்று தெரிவித்துள்ளன. இலங்கையின் மனிதப் புதைகுழிகளுக்கு சர்வதேச விசாரணை அவசியம் என்று பிரித்தானியா கோரியது. ரஷ்யா, பாகிஸ்தான் உட்பட்ட நாடுகள் இலங்கையின் பக்கம் தங்கள் குரலை வெளிப்படுத்தின.

இந்தியா வழமைபோன்று பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, மாகாண சபைகளுக்கான தேர்தல் என்ற கோரிக்கைகளை இங்கு முன்வைத்தது. இது தொடர்பான ஒரு சந்திப்பை இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் தமிழர் தரப்புடன் ஆரம்பித்திருப்பதையும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசுடன் பேசிக் கொண்டிருப்பதைவிட பெற வேண்டியவைகளை பெற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெயசங்கர் சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் தம்மைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறியதை இப்போது நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.



நாமல் ராஜபக்சவின் எதிர்கால உயர்ச்சியை மையப்படுத்தி மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ள அரசியல் பயங்கரவாதமும், இதனை மறுதலிக்கும் வகையிலான அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ள அரசியல் கலாசார மாற்றமும், சில வருடங்களுக்கு தொடரப்போவதாக எதிர்பார்க்கப்படும் ஒற்றை ஆட்சி முறையைத் தீர்மானிக்கும் கருக்களாக அமையக்கூடும்.



ஜெனிவாவில் தற்போதைய கூட்டத்தொடரில் இறுதிப் பகுதியில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானமொன்றை பிரித்தானியா, கனடா, மலாவி, மொன்டிநீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் முன்வைக்கவுள்ளன. வழமையாக இவ்வகையான தீர்மானங்களின் வாக்கெடுப்பின்போது அதில் வாக்குரிமை பெற்ற நாடுகளில் கூடுதலானவை தீர்மானத்தை ஆதரிப்பதுண்டு. ஆனால் இலங்கை அரசு, வாக்களிப்பில் பங்குபற்றாத நாடுகளின் எண்ணிக்கையையும் எதிர்த்து வாக்களிக்கும் நாடுகளின் எண்ணிக்கையோடு சேர்த்து தீர்மானத்தை ஏற்காத நாடுகள் அதிகமென்று அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காகப் போலும் இம்முறை வாக்களிப்பிலிருந்து இலங்கை விலகக் கூடுமென எதிர்வு கூறப்படுகிறது.

ஜெனிவா திருவிழா இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில், உள்நாட்டில் அநுர குமர ஆட்சியின் முதலாவதாண்டு பூர்த்தியை இந்த மாதத்தில் ஜே.வி.பி.யினர் கொண்டாடுகின்றனர். கடந்த இரண்டாம் மூன்றாம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அநுர குமர பல நிகழ்வுகளில் பங்குபற்றி உரையாற்றினார். கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் காலங்களில் காணப்பட்ட பொதுமக்களின் ஆரவாரமோ அக்கறையோ இம்முறை காணப்படவில்லை.

இதனை நிவர்த்தி செய்வது போன்று தெற்கில் அரசியல் சமாசாரங்கள் சூடு கண்டன. முன்னாள் ஜனாதிபதிகளுக்கான [illegible] நாளில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோதபாய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க மற்றும் ரணசிங்க பிரேமதாசவின் விதவை மனைவி ஆகியோருக்கு, அரச குடியிருப்பு உட்பட பல சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக விஜேராம மாவத்த பங்களாவிலிருந்து வெளியேற மறுத்து வந்த மகிந்த ராஜபக்ச புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே அங்கிருந்து வெளியேறி தமது சொந்த ஊரான தங்காலையிலுள்ள இல்லத்துக்குச் சென்றுள்ளார். அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதல் நாளான செப்டம்பர் 11ல் இந்த வெளியேற்றம் இடம்பெற்றது தற்செயலானது. ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அரசியலை ஆரம்பித்த தமது சொந்த ஊருக்கு மகிந்த திரும்பியுள்ளார். சற்று ஓய்வின் பின்னர் மீண்டும் கொழும்பு திரும்பி அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார்.

இலங்கையின் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொருவர் தமது வீடுகளை மகிந்தவுக்கு வழங்கத் தயாராகவுள்ளனர் என இவரது பொதுஜன பெரமுன சில வாரங்களுக்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்து இவரை தேசிய மகாபுருசராக்க முனைந்தது. ஆனால் அப்படியெதுவும் இடம்பெறவில்லை. ஆனாலும் விஜேராம மாளிகை வெளியேற்றத்தை தமக்கான ஆதரவு அலையாக மாற்றுவதில் பெரமுனகாரர்கள் அக்கறை காட்டினர். தங்காலை வீட்டில் அவர் குடியேறுவதையும் அவ்வாறே மாற்ற முனைந்தனர். ஆனால் எல்லாம் ஒரு நாள் நாடகமாக முடிந்தேறியது.

ஜனாதிபதிகள் சலுகைகள் நீக்கச் சட்டம் ஒருவருக்காக கொண்டு வரப்பட்டதல்ல. முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருக்குமானது. மைத்திரிபால சிறிசேன அமைதியாக தமது வீட்டுக்குச் சென்றுவிட்டார். ரணிலும் கோதபாயவும் தங்கள் சொந்த வீட்டில் இருந்ததால் அவர்கள் வெளியேற வேண்டியிருக்கவில்லை. சந்திரிக குமாரதுங்க நிலைமை சற்று வித்தியாசமானது. புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே தொடர்ந்து அரச வீட்டில் தாம் இருப்பதற்கு முழு வாடகை செலுத்த தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம் எழுதியதாகவும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கறுவாக்காட்டிலுள்ள றோஸ்மீட் பிளேஸ் இல்லத்தை விற்று கிடைத்த பணத்திலேயே தாம் வாழ்ந்து வருவதாகவும், அதில் பதினான்கு மில்லியன் ரூபாவை தற்போது குடியிருக்கும் அரசாங்க வீட்டுக்கு செலவிட்டதாகவும், தமக்கு இரு தடவை புற்றுநோய் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், அண்மையில் இடறி விழுந்ததால் இடுப்பு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு அசைவதில் சிரமப்படுவதாகவும் தமது கடிதத்தில் தெரிவித்துள்ள சந்திரிக குமாரதுங்க, புதிய வாடகை வீட்டில் குடியேற இரண்டு மாதங்கள் தவணை தருமாறும் அரசாங்கத்திடம் கோரியுள்ளார். சந்திரிக ஆட்சியில் ஜே.வி.பி. 39 உறுப்பினர்களோடு தாம் அமைச்சராகவிருந்த காலத்தை நினைவிருத்தி சிலவேளை கருணை அடிப்படையில் சந்திரிகவுக்கு தவணை வழங்க அநுர குமர விரும்பலாம். அரசியல் என்றால் இதுதானே.

மற்றைய முன்னாள் ஜனாதிபதிகள் புதிய சலுகைகள் நீக்க சட்டத்தை ஏற்று தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டாலும், மகிந்தவால் மட்டும் அது முடியவில்லை. தமது மகன் நாமலுக்கு ஜனாதிபதி மகுடம் சூட்டுவதையே இலக்காகக் கொண்டு தமது இயலாமையையும் மறந்து அரசியலில் தொடர விரும்புகிறார். இதன் முதல் அங்கமாக தமக்கு இழைக்கப்பட்டதை அரசியல் பயங்கரவாதம் என்று நாமம் சூட்டியுள்ளார். புலிப்பயங்கரவாதத்தை முடித்து வைத்த தங்கள் தலைவர் மீது அரசியல் பயங்கரவாதம் ஏவப்பட்டுள்ளது என்று இவரது பெரமுனகாரர்கள் கோசம் எழுப்பத் தொடங்கியுள்ளனர். இதற்குப் பதிலளித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அரசாங்கத்தின் செயற்பாட்டினை அரசியல் கலாசார மாற்றம் என்று விளக்கமளித்துள்ளார்.

நாமல் ராஜபக்சவின் எதிர்கால உயர்ச்சியை மையப்படுத்தி மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ள அரசியல் பயங்கரவாதமும், இதனை மறுதலிக்கும் வகையிலான அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ள அரசியல் கலாசார மாற்றமும், சில வருடங்களுக்கு தொடரப்போவதாக எதிர்பார்க்கப்படும் ஒற்றை ஆட்சி முறையைத் தீர்மானிக்கும் கருக்களாக அமையக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பிரஞ்ஞையுடன் வாழ்ந்த அஜீவனுக்கு அஞ்சலி

சமூகப் பிரஞ்ஞை கொண்ட ஓர் படைப்பாளி தனது செயற்பாடுகளை நிறுத்தி நம்மை விட்டு மறைந்துள்ளார்.

அஜீவனுடன் எனது தொடர்புகள் மிகக் குறைவாக இருந்தாலும், பல அரசியல் செயற்பாடுகளில் இணைந்து செயலாற்ற வாய்ப்பு கிடைத்தது. அரசியல் நோக்குகளில் முரண்பாடுகள் இருந்த போதிலும், ஈழத்தமிழர் நலனில் ஒருங்கிணைந்து செயல்பட முயற்சித்தோம்.

2009 ஆம் ஆண்டு ஈழத்தில் ஆயுதங்கள் மௌனமான பிறகு, விடுதலைப் புலிகளின் அரசியல் தொடர்பான முரண்பாடுகள் ஐரோப்பா, கனடா, அமெரிக்கா ஆகிய இடங்களில் பல மையங்கள் மற்றும் தனிநபர்களிடம் தோன்றின. அதே நேரத்தில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் திட்டங்களை ஒருங்கிணைக்க சுவிட்சர்லாந்தில் பொதுவான அமைப்பொன்றை உருவாக்கும் பணியில் அஜீவனும் என்னுடன் இணைந்து செயல்பட்ட நினைவுகள் இன்று மனதில் மீண்டும் உயிர்த்தெழுகின்றன.

அஜீவன் பலருடன் கருத்து முரண்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும், ஈழ மக்களின் அரசியல் மற்றும் நலன்களில் ஆழ்ந்த அக்கறை கொண்டவராகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்தார். மேலும், அவர் ஒரு படைப்பாளியும் கலைஞரும் என்பதால் பல இலக்கிய நண்பர்களையும் கலைஞர்களையும் சுற்றியிருந்தார்.



2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தனது முகநூலில் அஜீவன், தன் வாழ்வின் இறுதியைப் பற்றிய சிந்தனையை வெளிப்படுத்தினார்:

"என்னை பராமரிக்கும் ஒரு சுவிஸ் நண்பர், 'உனக்கு ஏதாவது நடந்தால் என்ன செய்வது என எனக்குத் தெரிய வில்லை' என்றார்.

நான் சொன்னேன்: 'இறந்த பிறகு என்ன செய்வார்கள் என நான் கவலைப்பட வில்லை. அதேபோல் யார் வந்து என்னை பார்க்கிறார்கள் என்பதையும் நான் உணரப்போவதில்லை. ஒவ்வொரு ஜீவனும் எப்படியோ அழியத்தான் போகிறது. அதை தடுக்க யாராலும் முடியாது. அதற்காக யோசிக்க வேண்டிய அவசியமுமில்லை, வருந்த வேண்டிய அவசியமுமில்லை. நாம் எதையும் கொண்டு போகப்போவதில்லை. நடப்பது நடக்கும், அவ்வளவு தான்' எனச் சொல்லி விட்டு சிரித்தேன்."

அஜீவன், புகழ்பெற்ற பகுத்தறிவாளர் ஆபிரகாம் தோமஸ் கோவூர் குடும்பத்தின் வாரிசாவார். இன்று பலருக்கு டாக்டர் கோவூர் பற்றிய அறிவு குறைவாக இருக்கலாம். அவர் தமிழ் சமூகத்தில் நிலவி வந்த மூடநம்பிக்கைகளை சவாலுக்கு உட்படுத்தி, பல புத்தகங்களை எழுதி மக்களை விழிப்புணர்வுடன் ஆக்கியவர்.

கோவூரின் சிந்தனைகள்:

"மனித குலத்திற்கான மிகப்பெரிய பகைவர் - மூடநம்பிக்கை."

"அறிவியலால் சோதிக்க முடியாத எந்தக் கூற்றையும் நான் ஏற்க மாட்டேன்."

"சாமியார்கள் மக்களை ஏமாற்றுகின்றனர் உண்மையான அதிசயம் - மனிதனின் அறிவுத்திறன்."

"கடவுள் இல்லை மனிதன் தான் தனது விதியை உருவாக்குவான்."

இந்த சிந்தனைகள் அஜீவனின் வாழ்விலும் தாக்கம் ஏற்படுத்தியதால், அவர் சமூக அக்கறையுடன் செயல்பட்டார்.

இப்போது புலம்பெயர் நாடுகளில் விடுதலை இயக்கங்களுக்கு உழைத்த முதல் தலைமுறை செயற்பாட்டாளர்கள் படிப்படியாக உலகைவிட்டு விலகிக் கொண்டு இருப்பதைக் காட்டும் இன்னொரு நிகழ்வாக அஜீவனின் மறைவு அமைந்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக, சமூகப் பற்றுள்ள பல நபர்கள் தமது உடல் நலனை புறக்கணித்து மிக விரைவாக வாழ்க்கையை முடித்து விடுகின்றனர். அஜீவனின் இழப்பு அதற்கான இன்னொரு உதாரணமாகும்.


அவரது படைப்பாற்றலுக்கும் சமூகத்திற்கான காதலுக்கும் தலைவணங்கி நாங்கள் விடைபெறுகிறோம்.

அஜீவனை இழந்து தவிக்கும் அவரது குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- கணபதிப்பிள்ளை சுதாகரன்,**
(சுவிஸ்)

# இந்தியா மீது அமெரிக்கா 50 வீத வரி விதித்ததால் இலங்கை பலன் பெறுமா?

**ரஞ்சன் அருண் பிரசாத்**



ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்வனவு செய்வதன் ஊடாக உக்ரேன் போருக்கு மறைமுகமாக இந்தியா ஆதரவு வழங்கியுள்ளதாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சுமத்திய நிலையில், இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்யும் பொருட்கள் மீது வரியை அமெரிக்கா 50 சதவீதமாக அதிகரித்து அறிவித்துள்ளது.

இந்த வரி விதிப்பானது கடந்த ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி முதல் அமலுக்கு வந்த நிலையில், தற்போது சர்வதேச அரசியலில் அது பாரிய சர்ச்சையுடனான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது.

தெற்காசிய நாடுகளின் பட்டியலை எடுத்துக் கொண்டால், இந்தியாவிற்கே அதிகளவான வரியை அமெரிக்கா விதித்துள்ளது.

வங்கதேசத்துக்கு 20 சதவீதம், இலங்கைக்கு 20 சதவீதம், பாகிஸ்தானிற்கு 19 சதவீதம், ஆப்கானிஸ்தானிற்கு 15 சதவீதம், பூட்டானுக்கு 10 சதவீதம், மாலத்தீவுக்கு 10 சதவீதம், நேபாளத்திற்கு 10 சதவீதம் என்ற அடிப்படையில் அமெரிக்கா வரியை அறிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து தமது நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் மீது 50 சதவீத வரியை அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையில் இலங்கை மீது அமெரிக்கா முதலில் 44 சதவீத வரியை விதித்து அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

இதையடுத்து, இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள், அமெரிக்காவிற்கு விஜயம் செய்து, அமெரிக்க அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தனர்.

இந்த கலந்துரையாடலின் பிரதிபலிப்பாக 44 சதவீதமாக அறிவிக்கப்பட்ட வரி , 30 வீதம் வரை குறைக்கப்பட்டு, பின்னர் அந்த வரி 20 சதவீதமாக அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி நாடாக அமெரிக்கா காணப்படுவதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தனது அதிகாரப்பூர்வ இணையத்தளத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் ஒட்டு மொத்த ஏற்றுமதியில் அமெரிக்காவிற்கான ஏற்றுமதியானது 23 சதவீதம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அமெரிக்காவிற்கான ஏற்றுமதியின் ஊடாக 1,434.99 மில்லியன் அமெரிக்க டாலர் வருமானத்தை இலங்கை எட்டியுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த காலப் பகுதியை பொறுத்த வரை 4.61 சதவீத வளர்ச்சி இருந்தது என அதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தைத்த ஆடைகள், தேயிலை, இறப்பர் சார்ந்த பொருட்கள், தேங்காய் சார்ந்த பொருட்கள், இரத்தினகல், தங்காபரணம், இலத்திரனியல் பொருட்கள், உணவு பண்டங்கள், மீன் வகைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத ஏற்றுமதி வரியை அடுத்து, இலங்கையின் அமெரிக்காவிற்கான ஏற்றுமதியை வலுப் பெற செய்ய முடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி, தெரிவிக்கின்றார்.

ஆனால், திட்டமிட்ட வகையில் இந்த ஏற்றுமதியை செய்வதன் ஊடாகவே அதனை செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

'இந்தியா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கின்ற பொருட்களுக்கு 50 சதவீத வரியை செலுத்த வேண்டும். ஆனால், இலங்கையில் இருந்து போகின்ற போது 20 சதவீத வரியை செலுத்தினால் போதுமானது. அதனூடாக இலங்கைக்கு நன்மை இருக்கும்.

அமெரிக்க நுகர்வோர் இலங்கை பொருளை மலிவானதாக கருதி வாங்குவார்களாக இருந்தால், இது இலங்கை போன்ற நாடுகளுக்கு நன்மையை தரக்கூடியதாக இருக்கும். ஆனால், இலங்கையிலி ருந்து செல்கின்ற பொருளை விட இந்தியாவிலி ருந்து செல்கின்ற பொருள் தரம் வாய்ந்தது அல்லது வர்த்தக நாமம் பிரபலமானது என்ற ஒரு நிலைமை இருக்குமாக இருந்தால், இலங்கை போன்ற நாடுகள் எதிர்பார்த்த வர்த்தக ரீதியான வருமா னத்தை காண முடியாது" என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தியாவிற்கு விதிக்கப்பட்டுள்ள 50 சதவீத ஏற்றுமதி வரியை பயன்படுத்திக் கொண்டு, தமது ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இலங்கை ஏற்றுமதியாளர்கள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தியிடம் வினவியபோது,

'இந்தியாவின் ஏற்றுமதி பட்டியல் என்ன என்பதை இலங்கை பார்க்க வேண்டும். இந்தியா என்னென்ன பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கின்றது என்பதை இலங்கை ஏற்றுமதியாளர்கள் பார்க்க வேண்டும். அந்த பொருட்களை இலங்கையில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்ய முடியுமாக இருந்தால், அது நன்மையை தரக்கூடியதாக இருக்கும்.

இந்தியாவிற்கு 50 சதவீத வரி, இலங்கைக்கு 20 சதவீத வரி என்றாலும் கூட உடனடியாக இலங்கையின் ஏற்று மதி உற்பத்தி கட்டமைப்பை மாற்றியமைக்க முடியாது. அதற்கு ஒரு கால இடைவெளி தேவைப்படும். இலங்கை எல்லா கட்டமைப்பையும் மாற்றியமைத்துக் கொண்டி ருக்கின்ற போது டொனால்ட் ட்ரம்ப் என்பவரை நம்ப முடியாது.

இல்லை இந்தியாவிற்கு விதிக்கப்பட்ட வரியை நாங்கள் அகற்றிக் கொள்கின்றோம் என்று சொல் லக்கூடிய வாய்ப்புக்களும் இருக்கின்றது. எங்களை போன்ற நாடுகள் ஏற்றுமதி உற்பத்தி கட்டமைப்புக்களை மாற்றியமைக்குமாக இருந்தால், இந்த சூழலில் இலங்கை போன்ற நாடுகள் மிகப் பெரிய பாதிப்புக்களை சந்திக்க நேரிடும்".

இந்தியா மீதான வரி அதிகரிப்பை அடுத்து, இலங்கை போன்ற நாடுகள் உடனடியாக தமது உற்பத்தி கட்டமைப்பை மாற்றிக் கொள்ளக்கூடாது என கூறும் அவர், அமெரிக்க தொடர்ந்தும் இந்த வரிக் கொள்கையை கடைபிடிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஏற்கனவே நாங்கள் ஏற்றுமதி செய்கின்ற பொருட்கள் மற்றும் அதற்கு போட்டியாக இருக்கக்கூடிய பொருட்கள் பற்றி யோசிக்கலாம். அவற்றுக்கு பெரிதாக உற்பத்தி கட்டமைப்பை மாற்றியமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்படாது.

இன்னுமொரு 6 மாதங்களாகின்ற போது இந்த வர்த்தக கொள்கையினுடைய சூட்டை அதனுடைய தாக்கத்தை அமெரிக்க நுகர்வோர்கள் அனுபவிப்பார்கள். அப்படி அனுபவிக்கும் பட்சத்தில் பணவீக்கம் அதிகரிக்கின்ற போது டொனால்ட் ட்ரம்பினால் இந்த கொள்கைகளை தொடர்ந்து கடைபிடிக்க முடியாது" என விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி தெரிவிக்கின்றார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்:

## பெற்றோர்கள் எழுதும் பரீட்சை?



நிலாந்தன்



கடந்த வாரத்துக்கு முதல் வாரம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. பெற்றோரும் உறவினர்களும் தங்களுடைய பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகளை முகநூலில் பகிர்ந்து கொண்டாடினார்கள். இந்த இடத்தில் எனது நண்பர் ஒருவர் கூறிய உரையாடல் ஒன்று எனக்கு நினைவுக்கு வந்தது. அந்த உரையாடல் நடந்த இடம் யாழ்ப்பாணத்தின் மிகப் பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் வாசலில். புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் தங்கள் பிள்ளைகளுடைய வகுப்பு முடியும் வரையிலும் தனியார் கல்வி நிறுவனத்தின் வாசலில் காத்துக் கொண்டிருந்த பெற்றோருக்கு இடையிலான உரையாடல் அது. இந்த உரையாடலை அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த எனது நண்பரும் ஒரு கட்டத்தில் அந்த உரையாடலில் ஈடுபட்டார். அந்த உரையாடல் வருமாறு...

பெற்றோர்-1-'இந்தச் சின்ன வயதில் எங்கட பிள்ளைகள் எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வேண்டி இருக்கு? அஞ்சு மணிக்கு எழுப்ப வேணும்".

பெற்றோர்-2- "அப்படியே? அஞ்சு மணிக்கு எழும்பி எத்தனை மணி மட்டும் படிக்கிறது?"

பெற்றோர்-1-"அஞ்சு மணியிலிருந்து ஆறு மணி மட்டும் வீட்டில படிப்பு. ஆறிலிருந்து ஏழு மட்டும் ரியூஷன். ரியூசன் முடிஞ்ச கையோட வீட்ட வந்து சாப்பிட்டிட்டு பள்ளிக்கூடத்துக்குப் பறக்க வேணும்".

பெற்றோர் -2 -'பள்ளிக்கூடத்தால வந்து?"

பெற்றோர்-1- "வந்த வேகத்தில் சாப்பிட வேணும். பிறகு ஒரு சின்னத் தூக்கம். பிறகு இரண்டிலிருந்து நாலு மணி மட்டும் ரியூஷன். பிறகு நாலரையில இருந்து இந்த டியூஷன். பிறகு ஏழில இருந்து ஒன்பது மட்டும் வீட்டில தாய் படிப்பிப்பா".

பெற்றோர் -2- "அப்ப பிள்ளை எப்ப நித்திரைக்குப் போகும்?"

பெற்றோர் -1- "10 மணிக்கு .. நாலரைக்கு எழும்ப வேணுமே? எங்கட பிள்ளையள் எவ்வளவு வருந்திப் படிக்க வேண்டி இருக்கு?"

இந்த உரையாடல் போய்க்கொண்டிருக்கும்போது வகுப்பு முடிந்து பிள்ளைகள் வெளிவரத் தொடங்கி விட்டன. எனவே முதலாவது பெற்றோர் தனது பிள்ளையை ஏற்றிக்கொண்டு சென்று விட்டார். இரண்டாவது பெற்றோர் இப்பொழுது எனது நண்பரோடு கதைக்கிறார்.

'பாத்தீங்களே பிள்ளைய எப்பிடிப் படிப்பிக்கினம் என்று? அவர் சொன்னது உண்மை எண்டு நம்புறீங்களே ?"

எனது நண்பர் - "ஏன் பொய்யே?"

பெற்றோர் -2- "ஓம். அது பொய். அவர் சொன்னவர் பிள்ளை அஞ்சு மணிக்கு எழும்புது என்று. அது பொய். பிள்ள மூன்று மணிக்கு எழும்புது. அது பத்து மணிக்கு நித்திரைக்குப் போறதில்ல. 11 மணிக்குத்தான் போகுது".


நண்பர்- "உண்மையே? ஏன் அப்பிடிப் பொய் சொன்னவர்?"

பெற்றோர் -2- "ஏனெண்டால் தன்ர பிள்ள அவ்வளவு நேரம் படிக்குது எண்டு சொன்னா நீங்களும் உங்கட பிள்ளைய அப்படிப் படிப்பீங்கள். போட்டியில உங்கட பிள்ளை முன்னுக்கு வரலாம். அதுதான் தன்ர பிள்ள படிக்கிற நேரத்தக் குறைச்சுச் சொன்னவர்".....

இது அந்தத் ரியூட்டரி வாசலில் நடந்த ஓர் உரையாடல். புலமைப் பரிசில் பரீட்சையின் போட்டி மனோநிலையை அது காட்டுகிறது. பரவலாக விமர்சிக்கப்படுவதுபோல அது பிள்ளைகளின் பரீட்சை அல்ல. நடுத்தர வர்க்கப் பெற்றோரின் பரீட்சைதான். அதுவும் படித்த நல்ல உத்தியோகம் பார்க்கும் பெற்றோர். ஆனால் பிள்ளைகளிடம் அவ்வாறான போட்டி மனோநிலை இருக்கும் என்று எடுத்துக் கொள்ள முடியாது. அப்படி ஒரு போட்டி மனோநிலைக்குரிய வயது அதுவல்ல.

எனக்குத் தெரிந்த ஓர் ஆசிரியரின் பிள்ளை பரீட்சை எழுதிய பொழுது கல்வியதிகாரியான அவருடைய நண்பர் ஒருவர் சொன்னார் "பரீட்சை எழுதப் போகும்போது பிள்ளைக்கு உறிஞ்சிக் குடிக்கும் ஒரு தண்ணீர்ப் போத்தலை வாங்கி கொடுங்கள். பரீட்சைச் சூழலில். பதட்டத்தில் பிள்ள மூடியைத் திறக்கும் போதோ அல்லது மூடும்போதோ நீரைச் சிந்தி விடக்கூடும்"..... என்று. தண்ணீர்ப் போத்தலின் மூடியை பதட்டத்தில் சரியாக மூட முடியாத ஒரு வயதில் இப்படி ஒரு தேசிய மட்டப் பரீட்சை தேவையா? இந்தக் கேள்வி இந்த நாட்டில் ஏற்கனவே பல மனநிலை மருத்துவர்களாலும் கல்வியியலாளர்களாலும் கேட்கப்பட்டுவிட்டது. ஆனால் மாற்றம் நடக்கவில்லை.

> சிறு பிள்ளைகளுக்கான ஒரு தேசிய பரீட்சையை நீக்கும் விடயத்தில் சமூகத்தின் கூட்டு உளவியலை மீறிப்போகப் பயப்படும் ஓர் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு, யுத்த வெற்றி நாயகர்களை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தலாமா இல்லையா? போன்ற இதயமான பிரச்னைகளில் துணிந்து முடிவெடுக்கும், ரிஸ்க் எடுக்கும் என்று எப்படி நம்புவது?



அந்தப் பரீட்சையின் போட்டித் தன்மை காரணமாக அந்தப் பரீட்சைக்குத் தயார் படுத்தும் தனியார் கல்வி நிறுவனங்கள் அதிக வருவாயீட்டும் தொழிற் துறையாக வளர்ந்து விட்டன. அங்கே இலவசக் கல்வி கேள்விக்குள்ளாகிறது. அங்கே வசூலிக்கப்படும் காசு ஏனைய தேசியமட்டப் பரீட்களுக்காகப் படிக்கும் பிள்ளைகளிடம் வசூலிக்கப்படும் காசைவிட அதிகமாகவும் இருப்பதுண்டு. பரீட்சை பெறுபேறுகளின் பின் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படும் விதத்திலும் பெற்றோரின் மனோநிலை தெரிகிறது. சில ஆசிரியர்களுக்கு தங்கச் சங்கிலி பரிசாக வழங்கப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் தென்னிலங்கையில் ஒரு தகப்பன் ஆசிரியருக்கு ஒரு காரை வாங்கிக் கொடுத்தார்.

ஆனால் இதில் சித்தி பெற்ற பிள்ளை பின்னர் வரக்கூடிய சாதாரண தரம் உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் வெற்றி பெறும் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி ஒருவர் சொன்னார். மேல் மாகாணத்தில் அவருக்கு நியமனம் கிடைத்தது. நியமனம் கிடைத்ததும் அவர் முதலில் போனது கொரனவில் உள்ள தக்க்ஷிலா மத்திய கல்லூரிக்கு. அங்கேதான் புலமைப் பரிசில் பரீட்சையில் நாட்டிலேயே முதற் தடவை 200 புள்ளிகளைப் பெற்ற பிள்ளை படித்துக் கொண்டிருந்தது. அந்தப் பிள்ளையின் ஆறாவது ஆண்டு தவணைப் பரீட்சைகளின் பெறுபேறுகளை அவர் தொகுத்துப் பார்த்திருக்கிறார். அந்தப் பிள்ளை முன்னணியில் நிற்கவில்லை.

அதாவது ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற எல்லா பிள்ளைகளுமே கல்விப் பொது சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளில் பிரகாசிக்கும் என்றில்லை. ஒரு தேசிய பரீட்சையின் முக்கியத்துவத்தை உணர முடியாத வயதில் பிள்ளைகளை பந்தயக் குதிரைகளாக மாற்றுவது பெற்றோர்தான். இந்த பந்தயக் குதிரை மனோபாவம் பிள்ளைகளின் உளவியலைப் பாதிக்கின்றது. அதேயளவுக்கு அவர்களுடைய உளப்பாங்கையும் தீர்மானிக்கின்றது. உலகின் முன்னேறிய கல்வி முறைமையைக் கொண்டிருக்கும் நாடுகளில், குறிப்பாக யப்பானில் பிள்ளைகளுக்கு குறிப்பிட்ட வயதுவரை பரீட்சைகள் இல்லை. அதற்குக் கூறப்படும் விளக்கம் என்னவென்றால், உளப்பாங்கு உருவாகும் ஒரு காலகட்டத்தில் போட்டிப் பரீட்சைகளை வைத்தால் அது பிள்ளைகளின் உளப்பாங்கில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சிறு பிராயத்திலேயே உருவாக்கப்படும் போட்டிச் சூழல் பிள்ளைகளை சுயநலமும் பேராசையும் பொறாமையும் கள்ளத்தனமும் கொண்டவர்களாக மாற்றி விடுகிறது.

"பிள்ளைகளுக்கு இந்த புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகவும் கடினமான சுமையை கொடுக்கிறார்கள். புலமைப்பரிசில் பரீட்சை ஒரு சிறந்த வியாபாரமாகவும் மாறிவிட்டது. உண்மையில், குழந்தைகள் இன்னும் இந்த சுமையை புரிந்து கொள்ளும் அளவு முதிர்ச்சி அடையவில்லை. எனவே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பிள்ளைகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்க வேண்டாம் என பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிள்ளை சித்தி அடைந்தாலும் அல்லது தோல்வியடைந்தாலும், கல்வியின் பெறுமதியை பற்றிய அவர்களின் புரிதல் காலப்போக்கில் தெரிய ஆரம்பிக்கும். கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவும் சூழலை அவர்களுக்கு உருவாக்குங்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் மற்றும் பிறருக்கு மரியாதை கொடுப்பதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள், ஏனெனில் இந்த பண்புகள் அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் கல்விக்கு மிக முக்கிய பங்களிக்கும்" என்று கூறுகிறார், பேராதனைப் பல்கலைக்கழக,பொறியியற் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி. நவரட்ணராஜா.

போட்டிபோட்டுப் படித்து பட்டம் பெற்று, முன்னிலைக்கு வந்த பலர் சில ஆண்டுகளுக்கு முன் நாட்டில் பொருளாதார நெருக்கடி தோன்றிய பொழுது நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார்கள். இந்த போட்டி மனோநிலை முன்னேறுவதில் மட்டுமல்ல தப்பிச் செல்வதிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் நன்கு தெரிந்த ஒருவர் பிரதமராகவும் கல்வி அமைச்சராகவும் உள்ள அரசாங்கத்தால்கூட புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக பொருத்தமான முடிவை எடுக்க முடியவில்லை. கடந்த வாரத்துக்கு முதல் வாரம் கொழும்பில் தேசிய கல்வி ஆணைக்குழுவை சந்தித்த பிரதமர் ஹரினி இந்த விடயதைப் பற்றியும் உரையாடியுள்ளார். புலமை பரிசில் பரீட்சையை இப்போதைக்கு அவர்கள் நீக்கப் போவதில்லை என்று தெரிகிறது. சிலசமயம் அவர்களுடைய ஆட்சிக்காலம் முடிவதற்கு இடையிலாவது நீக்கப்படுமா என்பதும் சந்தேகம் தான். சிறு பிள்ளைகளுக்கான ஒரு தேசிய பரீட்சையை நீக்கும் விடயத்தில் சமூகத்தின் கூட்டு உளவியலை மீறிப்போகப் பயப்படும் ஓர் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு, யுத்த வெற்றி நாயகர்களை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தலாமா இல்லையா? போன்ற இதயமான பிரச்சினைகளில் துணிந்து முடிவெடுக்கும், ரிஸ்க் எடுக்கும் என்று எப்படி நம்புவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளம், வங்காளம், இலங்கை ஆட்சி மாற்றத்தில் சக்திமிகு இளைஞர் போராட்ட மூலோபாயம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இலங்கை, வங்காளம் நாடுகளைத் தொடர்ந்து தற்போது நேபாளத்திலும் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் காரணமாக ஆளும் கட்சி ஆட்சியை விட்டு துரத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தில் இளம் போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லத்தை அடித்து நொறுக்கி உள்ளனர். பாராளுமன்றத்தை தீ வைத்து கொளுத்தி உள்ளனர். இதையடுத்து நேபாள அதிபர், பிரதமர் ஆகியோர் ராஜினாமா செய்தனர். நேபாள பிரதமர் தப்பியோடி உள்ளார்.

நேபாளத்தில் கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்னர் 2008-ம் ஆண்டு மே மாதம் இந்து மன்னராட்சி முடிவுக்கு வந்தது. கடந்த 239 ஆண்டுகளாக இருந்து வந்த மன்னராட்சியை அகற்ற வலியுறுத்தி பல ஆண்டுகளாக நடந்த போராட்டத்துக்கு அப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் அப்போராட்டத்தில் 16,000 மக்கள் உயிரிழந்தனர்.

நேபாளம் தற்போது வரலாறு காணாத போராட்டங்களால் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இந்த போராட்டங்களை வழிநடத்துபவர்கள் வேறு யாருமல்ல, சமூக ஊடகங்களில் கொடிகட்டிப் பறக்கும் புநெ ணு என்ற (ஜெனரேஷன் ஷற் ) இளைஞர்கள் தான்.

### தெற்காசியப் புவிசார் அரசியல்:

பொதுவாக 1997 முதல் 2012 வரை பிறந்தவர்கள் ஜென் ஷற் தலை முறையினர் என்று நேபாளத்தில் வரையறுக்கப்படும் இளைஞர்கள், வேலையின்மை, வறுமை, மற்றும் அரசின் அப்பட்டமான ஊழல்கள் என பல்வேறு பிரச்சனைகளால் அவர்கள் விரக்தியின் உச்சத்தில் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேபாளத்தில் நடந்த போராட்டத்தின் காட்சிகள், கடந்த ஆண்டு வங்கதேசத்தில் நடந்த போராட்டத்தை நினைவூட்டின. இதற்கு முன்னர் 2022ஆம் ஆண்டில் இலங்கையிலும் இளைஞர்கள் அரசுக்கு எதிராக பெரிய போராட்டங்களை நடத்தினர்.

நேபாளத்தில் மற்றொரு நெருக்கடி என்னவென்றால், முடியாட்சி முடிந்த பிறகு எந்த ஒரு அரசாங்கமும் ஐந்து ஆண்டுகள் முழுமையாகப் பதவியில் இல்லை. இதன் காரணமாக நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை நிலவுகிறது, மேலும் ஊழல் குற்றச்சாட்டுகளும் தொடர்ந்து எழுகின்றன.




நேபாள அரசு, முகநூல்,இன்ஸராகிராம், யூடியூப் உள்ளிட்ட 26 முக்கிய சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்ததால் தான் இந்த ஆவேசப் போராட்டம் வெடித்தது. இந்த தளங்கள் நேபாள அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்படாததே தடைக்கான காரணம் என அரசு கூறினாலும், இளைஞர்கள் இதை நம்பவில்லை.

ஆயினும் உண்மையான காரணம் பல ஆண்டுகளாக நேபாள இளைஞர்கள் மனதில் குமுறிக் கொண்டிருந்த கோபம்தான் இந்த போராட்டம். வேலையின்மை, வறுமை, மற்றும் அரசின் அப்பட்டமான ஊழல்கள் என பல்வேறு பிரச்சனைகளால் அவர்கள் விரக்தியின் உச்சத்தில் இருந்தனர். இதற்கிடையில், சூநேிழமுனை (நெப்போகிட்) என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்களில் பரவி, அரசியல்வாதிகளின் ஆடம்பர வாழ்க்கை முறையையும், சாதாரண மக்களின் வறுமையையும் ஒப்பிட்டு, அவர்களின் கோபத்தை மேலும் தூண்டியது.

நேபாள அரசு, கடந்த வாரம் செப்டம்பர் 4-ஆம் திகதி முதல் 26 சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்தது. தகவல் தொடர்பு அமைச்சகத்தில் பதிவு செய்ய தவறியதே இதற்கு முக்கிய காரணம் என அரசு கூறியது. ஆனால், இது கருத்து சுதந்திரத்தை நசுக்கும் முயற்சி என போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்தத் திடீர் சமூக ஊடகத் தடை, ஏற்கெனவே ஊழல் மற்றும் பொருளாதார பிரச்சனைகளால் கோபத்தில் இருந்த நேபாள இளைஞர்களை, வீதியில் இறங்கி போராட தூண்டிய ஒரு முக்கியமான காரணமாக கருதப்படுகிறது.




**இலங்கை, வங்காளம் மற்றும் நேபாளம் ஆகிய மூன்று நாடுகளின் போராட்டங்களுக்கான காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், மக்கள் எதிர்பார்ப்புகளுக்கும் அரசின் செயல்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளிதான் இந்த போராட்டங்களுக்குப் பொதுவான காரணம் ஆகும். இந்த மூன்று ஆட்சி மாற்றத்தின் மிகப் பெரிய பங்கை வகித்தவர்கள் இளைஞர்களே. இந்த அரசுகள் இளைஞர்களின் கோபத்தைத் தணிக்க முயற்சி செய்யாவிட்டால் மேலும் போராட்டங்கள் தொடரக்கூடும்.**




### பங்களாதேஷ் மாணவர் எழுச்சி:

தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தியாவுக்கு மேலாக உயர்ந்த நிலையில் இருந்த வங்க தேசம் கடந்த ஆண்டு பொருளாதர வீழ்ச்சியை அடைந்தது. வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், பிரச்சனையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாக இருந்தது.

மாணவர்கள் பங்களாதேஷில் 2024 ஜூலை மாத தொடக்கத்தில் நாடு முழுவதும் பல வாரங்களாக தொடர்ந்த புரட்சி சொந்த நாட்டின் அரசையே ஆட்டங்காண வைத்தனர். அதேவேளை அந்நாட்டின் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது என்பதும் உண்மைதான்.

இந்த போராட்டங்களுக்கு காரணம், சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இடஓதுக்கீட்டால், பங்களாதேஷ் முழுவதும் மாணவர்கள் எழுச்சியால் அரசியல் வன்முறை வெடித்தது. 2024 ஜூலை 31 வரையில் இந்த வன்முறை மூலம் பங்களாதேஷ் பொருளாதாரத்திற்கு 10 பில்லியன் டொலர் மதிப்பிலான இழப்பு ஏற்பட்டது.





அன்றைய பிரதமர் ஷேக் ஹசீனா 2024 ஜனவரி மாதம் நடந்த பொதுத் தேர்தலில் 41.8 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிகாரத்திற்கு வந்த பின், பல வருடங்களாகச் சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இடஒதுக்கீட்டை மீண்டும் அமுலாக்கம் செய்யும் முயற்சியில் இறங்கினார்.

இதன் விளைவே ஆட்சியை இழந்து, பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறினார். மாணவர்களின் தொடர் போராட்டங்களால் பங்களாதேஷ் நாடு எப்போதும் இல்லாத வகையில் அமைதியற்ற நாடாக மாறியது. தினமும் பலர் கொல்லப்பட்டனர்.

இறுதியில் மாணவ போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லத்திற்குள் நுழைந்து மொத்த வீட்டையும் சூறையாடி அழித்தனர். ஆயினும் இதற்கு முன்பே பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அவருடைய சகோதரி ஷேக் ரெஹானாவுடன் வங்கதேசத்தை விட்டு ஹெலிகாப்டர் வாயிலாக இந்தியாவுக்குத் தப்பி வெளியேறியிருந்தார்.

இவை அனைத்திற்கு முக்கியமான காரணமாக இருந்தது அந்நாட்டில் அமலிலிருந்த சர்ச்சைக்குரிய வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டு முறை தான். இதை எதிர்த்து மாணவர் போராட்டங்களில் தொடங்கியது நாடு தழுவிய நெருக்கடியாக அதிகரித்தது.

### இலங்கையில் அரகலய போராட்டம்:

2022 இலங்கையின் பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்த அரசால், அடுத்தடுத்த பொருளாதார நெருக்கடி மற்றும் கடுமையான பணவீக்கம், நாள்தோறும் மின் தடை, மற்றும் எரிபொருள், எரிவாயு, பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

அப்போது ஆட்சியில் இருந்த ராசபக்ச குடும்பத்தின் தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையாகும்.

அந்நிய செலாவணி கையிருப்பு குறைவு, சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் பற்றாக்குறை, உணவுப் பொருள் தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களால் அரசு மீது அதிருப்தி கொண்ட பல்வேறு தரப்பினரும் 2022 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டனர். நூற்றுக்கணக்கான சமூக ஊடகத் தலைவர்களும் இம்முற்றுகையில்



பங்கேற்று ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி போராடினர்.

பல ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வேண்டி, இளைஞர்கள் 2022 மார்ச் மாதத்தில், இலங்கையில் அரசுத் தலைவர் கோட்டபய்ய ராஜபக்சேவின் ஆட்சிக்கு எதிரான போராட்டங்களை தொடங்கினர். பெரும்பாலான எதிர்ப்பாளர்கள் தங்களை அரசியலற்றவர்கள் என்று கருதுகின்றனர், மேலும் சிலர் நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் மீது தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். போராட்டங்களின் போது, எதிர்ப்பாளர்கள் "கோட்டா வீட்டுக்குப் போ", "ராசபக்ச வீட்டுக்குப் போ" போன்ற எதிர்ப்புகளை எழுப்பினர்.

அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தல், பொது மக்களைக் கைது செய்ய இராணுவத்தை அனுமதித்தல், ஊரடங்குச் சட்டங்களை விதித்தல், சமூக ஊடகங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துதல், எதிர்ப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக வலைத்தள ஆர்வலர்களைத் தாக்குதல் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் எதிர்வினையாற்றியது.

எதிர்ப்புகளை ஒடுக்க முயற்சித்ததன் மூலம் அரசாங்கம் சட்டம் மற்றும் அரசியலமைப்பையும் மீறியது. புலம் பெயர்ந்த இலங்கையரும் இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் நசுக்கப்படுவதற்கு எதிராகத் தத்தமது நாடுகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் அநுர அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில்

## ஐக்கிய மக்கள் சக்தி முஜிபுர் எம். பி. சாடல்

கொழும்பு, செப். 14

ராஜபக்ஷக்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் இந்த அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர். 2018ஆம் ஆண்டில் 52 நாட்கள் அரசாங்கத்தின் போது தான் தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறான காரணிகள் வெளியே வரும் என்ற அச்சத்திலேயே விவாதத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய பிரதி பாதுகாப்பு அமைச்சர் கிழக்கு கட்டளை தளபதியாக பதவி வகித்த காலப்பகுதியிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சாட்சியான சாரா ஜஸ்மின் காணா



மல் போயுள்ளார்.

அவர் சாய்ந்தமருது குண்டு தாக்குதலில் உயிரிழந்ததாக நிரூபிப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பாரிய முயற்சிகளில் ஈடுபட்டது.

எனினும், தற்போதைய அரசாங்கம் சாரா ஜஸ்மின் உயிரிழக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றது. எனவே, இதில் சதித்திட்டம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அவர் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதையே நாமும் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். இந்தத் தாக்குதல்களுடன் புலனாய்வுப்பிரிவிலுள்ள சிலரும் தொடர்புபட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அவ்வாறிருக்கையில் அவர் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கும் போது எவ்வாறு சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க முடியும்? இதன் காரணமாகவே நாம் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்தோம்.

எனினும், அது சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டமா அதிபரின் ஆலோசனையை சபையில் சமர்ப்பிக்குமாறு நாம் கோரிய போதிலும், அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியும் என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியதாகவே எமக்குத் தகவல்கள் கிடைத்தன.

யாருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க முடியும், யாருக்கு எதிராக சமர்ப்பிக்க முடியாது என்று அரசமைப்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.- என்றார். (எ)

# இலத்திரனியல் விசா விநியோக முறை: கணக்காய்வாளர் திணைக்களம் ஆய்வு



கொழும்பு, செப். 14

இலத்திரனியல் விசா விநியோக முறைமை தொடர்பில் கணக்காய்வாளர் திணைக்களம் விசேட கணக்காய்வை மேற்கொண்டு அந்த வரைவு இறுதி மதிப்பீடு மற்றும் கண்காணிப்புக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் இறுதி மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு அறிக்கை வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜி. பி. எஸ் தொழில்நுட்ப சேவை மற்றும் ஐவிஸ் குளோபல் மற்றும் வி. எவ் நிறுவனம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு இடையில் நிகழ்நிலை முறைமை ஊடாக விசா விநியோக சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ளுமாறு கணக்காய்வாளர் திணைக்களம் பணிப்புரை விடுத்துள்ளது.

கணக்காய்வாளர் திணைக்களம் இவ்விடயம் தொடர்பில் விசேட கணக்காய்வை மேற்கொண்டு அந்த வரைவை இறுதி மதிப்பீட்டுக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் இறுதி மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு அறிக்கை 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த இலத்திரனியல் விசா விநியோக முறைமையை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் 08 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் தற்போது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நேபாளம், வங்காளம்,....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

2022 ஏப்ரல் 3 அன்று, பிரதமர் மகிந்த ராசபக்சவைத் தவிர, கோட்டாபய அமைச்சரவையில் இருந்த 26 உறுப்பினர்களும், பதவி விலகினர். இதையடுத்து 2022 மே 9 இல், பிரதமர் மகிந்த ராசபக்ச தனது பதவியில் இருந்து விலகினார். அமைதியான போராட்டங்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டு பதவி விலகியதாக மகிந்த கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

மேலும் 2022 ஜூன் 9 அன்று, பசில் ராஜபக்ச தனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். 2022 ஜூலை 9 அன்று, போராட்டக்காரர்கள் கொழும்பு நகரில் உள்ள அரசுத்தலைவர் மாளிகையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றினர். இதனால் கோட்டாபய ராசபக்ச தலைமறைவானார்.

இதையடுத்து இடைக்கால பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தாம் பதவி விலக விரும்புவதாக அறிவித்தார்.

2022 ஜூலை 13இல் அரசுத்தலைவரும் அவரது மனைவியும் மாலைதீவிற்கு வான்படை வானூர்தியில் சென்று அங்கிருந்து தனிப்பட்ட பயணமாக சிங்கப்பூர் சென்றனர். சிறிலங்கா வரலாற்றில் முதன் முறையாக நாட்டின் இளைஞர் போராட்டத்தால் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

**தெற்காசியாவில் இளைஞர் வகிபாகம்:**

தெற்காசிய கண்டமானது வேலையற்ற, பொருளாதார நெருக்கடி மிகுந்த இளைஞர்கள் அதிகம் வாழும் நாடுகளாகும். குறிப்பாக இந்தியா, வங்காளம், இலங்கை, பாகிஸ்தான் போன்ற அரசுகளால் இந்த இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியவில்லை. இந்த மூன்று நாடுகளின் போராட்டங்களிலும் இதுதான் போராட்டத்தின் பொதுவான ஒற்றுமை.

இலங்கை, வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகிய மூன்று நாடுகளின் போராட்டங்களுக்கான காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், மக்கள் எதிர்பார்ப்புகளுக்கும் அரசின் செயல்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளிதான் இந்த போராட்டங்களுக்கு பொதுவான காரணம். இந்த மூன்று போராட்டங்களிலும் 'இளைஞர்கள்' தான் மிகப் பெரிய மூலோபாய சக்திமிக்க காரணிகளாவர்.

இந்த அரசுகளின் ஆட்சி மாற்றத்தின் மிகப் பெரிய காரணிகளாக இளைஞர்கள் மீதே விழுகிறது. இந்த இளைஞர் பிரிவினர்தான் இத்தகைய அரசுகளின் மீது கோபமாக உள்ளனர். அரச இளைஞர்களின் கோபத்தைத் தணிக்க முயற்சி செய்யாவிட்டால், இதுபோன்ற போராட்டங்கள் இன்னும் பல நாடுகளில் நடைபெறும் சாத்தியங்கள் உள்ளன.

# அடுத்தடுத்து ஆட்சியாளர்களை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் அவர்களுக்கு எதிராகவே மக்கள் கிளர்ந்தெழுந்து அதிகாரத்தில் இருந்து அவர்களை விரட்டியிருப்பதையும் 'அரகலய' மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றங்களின் விளைவாக தேர்தல்களில் வெற்றி பெற்று பதவிக்கு வந்த இடதுசாரி இயக்கமான ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கவனத்தில் எடுப்பது அவசியம்.

பங்களாதேஷைப் போன்றே அடுத்த கட்ட அரசியல் செயன்முறைகளை தீர்மானிப்பதில் நேபாளத்தில் இராணுவம் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கிறது. இளைய தலைமுறையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் இராணுவத்துடன் ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல் நடத்திய நீண்ட பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு நேபாளத்தின் முன்னாள் பிரதம நீதியரசரான 73 வயதான சுசீலா கார்கி இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக வெள்ளிக்கிழமை ( செப்டெம்பர் 12) பதவியேற்றிருக்கிறார்.

நேபாளத்தின் முதல் பெண் பிரதம நீதியரசரான கார்கி (2016 - 2017), அந்த நாட்டின் நிருவாகத்துக்கு தலைமை தாங்கும் முதல் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாராளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்ற இளைய தலைமுறை இயக்கத்தின் கோரிக்கைக்கு ஜனாதிபதி இணங்கிக் கொண்டதன் பின்னரே கார்கியின் நியமனம் சாத்தியமாகியது. இடைக்கால நிருவாகத்தில் 'ஹமி நேபாள்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இடைக்கால அரசாங்கம் ஆறு மாத காலத்திற்குள் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது.

முடியாட்சியின் முடிவுக்கு பின்னரான கடந்த சுமார் 20 வருடகால ஜனநாயக பரீட்சார்த்தம் கண்டிருக்கும் தோல்வி நேபாளத்தின் அரசியல் எதிர்காலம் குறித்து குழப்பம் தரும் கேள்விகளை எழுப்புகிறது. தற்போதைய நெருக்கடியை நேபாளத்தின் குழப்பகரமான ஜனநாயக மாற்றத்தின் பரந்த பின்புலத்திலேயே விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இரண்டு வெற்றிகரமான மக்கள் போராட்ட இயக்கங்கள் (1990 - 2006) விரிவான அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை மற்றும் கூட்டாட்சி குடியரசு ஆட்சிமுறை ஆகியவற்றுக்கு பின்னரும் கூட சாதாரண மக்களுக்கு அர்த்தபுஷ்டியான மாற்றத்தை நேபாளம் கொண்டுவரவில்லை. இத்தகைய சூழ்நிலையை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற முடியாட்சிக்கு ஆதரவான சக்திகளும் இருக்கின்றன.

தெற்காசியாவின் மூன்று மக்கள் கிளர்ச்சிகளையும் பொறுத்தவரை, இலங்கையில் மாத்திரமே இடைக்கால அரசாங்கங்கள் நியமிக்கப்படவில்லை. கோட்டா... நாட்டை விட்டு வெளியேறி சிங்கப்பூரில் இருந்து ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பிறகு அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். பிறகு 2024 செப்டெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசநாயக்க ஜனாதிபதியாக தெரிவானார். 2024 பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்களை கைப்பற்றியது. ஜனாதிபதியாக திசநாயக்க பதவியேற்று இன்னமும் ஒன்பது நாட்களில் ஒரு வருடம் நிறைவடையப்போகிறது.

பங்களாதேஷில் அடுத்த வருட முற்பகுதியில் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. அந்த தேர்தல்கள் அமைதியான அதிகார மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேபாளத்தில் தற்போது வெளிக்கிளம்புகின்ற அரசியல் மாற்றுச் சக்திகள் புதிய நெருக்கடியை கையாளுவதற்கு அந்த பிடிக்கக்கூடிய அணுகுமுறைகளிலேயே அந்த நாட்டின் எதிர்கால அரசியல் திசைமார்க்கம் தங்கியிருக்கிறது.

பொதுவில் மக்கள் அரசியல் வர்க்கத்தின் மீது கடுமையான வெறுப்படைந்திருக்கிறார்கள் என்பதையே இந்த தெற்காசியக் கிளர்ச்சிகள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டின்...

எனவே, இளைஞர்கள் முறையற்ற செயல்களில் ஈடுபடாமல், ஜன நாயக ரீதியில் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

## பலஸ்தீனத்தை...

கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க, பலஸ்தீன மக்களின் அரச அந்தஸ்துக்கான மறுக்க முடியாத உரிமைக்கு, இலங்கை தனது அசைக்க முடியாத ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது - என்றுள்ளது. (அ)

## 2026...

(சா/த) பரீட்சையை அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடத்துவ தற்கும் கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலை விடுமுறை, உரிய காலப்பகுதியில் வழங்கப்பட வேண்டும் என கல்வியமைச்சு வெளியிட்டுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான உத்தியோக பூர்வ பாடசாலை கல்வித் தவணை அடங்கிய நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மன்னார்...

வினவியபோதே, அமைச்சின் செயலாளர் அது குறித்து பதில் வழங்கினார்.

விடயம் தொடர்பில் அமைச்சர் உள்ளிட்ட அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு அந்தப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் தொகுப்பாகக் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை தொடர்பான எரிசக்தி அமைச்சின் பரிந்துரைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (அ)

## மகிந்தவால்...

சிலரின் சமூகவலைத்தள பதிவுகள் அமைந்திருந்தன. இது பற்றி உங்களின் கருத்து என்ன." என்று வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த சஞ்ஜீவ எதிரிமான்ன,

"வடக்கிலுள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நிலைப்பாடு அல்ல இது. போரை முடிவுக்கு கொண்டுவந்தமை தொடர்பில் சிலர் மாறுபட்ட கருத்துடன் இருக்கலாம்.

ஆனால் வடக்கு மக்களால் கோரப்பட்ட அமைதியான அரசியல் சூழ்நிலையை மகிந்த ராஜபக்‌ஷவே ஏற்படுத்திக்கொடுத்தார். இதனை வடக்கு மறக்கவில்லை." - என்று குறிப்பிட்டார்.

அத்துடன், வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல்கூட இருந்திருக்கலாம். ஆனால் தோல்வி என தெரிந்தும் தேர்தல் நடத்தப்பட்டது.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து தமது உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கம் பக்கம் வந்த 3 லட்சம் பேர் பாதுகாக்கப்பட்டனர். அவர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன, காணிகள் விடுவிக்கப்பட்டன. வீடுகள் அமைக்கப்பட்டு மீள்குடியேற்றமும் செய்யப்பட்டது. சரணடைந்த 11,900 முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப் படுத்தப்பட்டன.

மஹிந்த அரசால்தான் வடக்கு முன்னேற்றம் கண்டது. இது வடக்கில் பெரும்பான்மையான மக்களுக்கு தெரியும். எனினும், பிரிவினைவாத சிந்தனையில் உள்ள சிலர் இருக்கலாம். அவர்களை திருப்திப்படுத்தும் விதத்திலேயே இந்த அரசு செயற்படுகின்றது." - என மொட்டு கட்சியின் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மருதானையில் துப்பாக்கிச்சூடு; உடந்தையாக இருந்தவர் கைது!

கொழும்பு, செப். 14

கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பஞ்சிகாவத்தை வீதியில் அமைந்துள்ள வங்கி ஒன்றுக்கு முன்பாக கடந்த 06 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த சந்தேக நபர் ஒருவர் கொழும்பு மத்திய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட வர் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவராவார்.

மருதானை - பஞ்சிகாவத்தை வீதியில் அமைந்துள்ள வங்கி ஒன்றுக்கு முன்பாக 06 ஆம் திகதி அதிகாலை 01. 40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், நபரொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதி மோட்டார் சைக்கிளுடன் கொழும்பு புளூ மெண்டல் பிரதேசத்தில் வைத்து கடந்த 06 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த சந்தேக நபர் ஒருவர் வாழைத்தோட்டம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு மத்திய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## பலஸ்தீனத்தை தனிநாடாக...

தீர்மானத்துக்கு ஆதரவாக 142 நாடுகள் வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல், ஹங்கேரி உட்பட 10 நாடுகள் எதிராக 10 நாடுகள் வாக்களித்தன, 12 நாடுகள் வாக்களிக்கவில்லை.

பலஸ்தீனப் பிரச்னைக்கு அமைதியான தீர்வு மற்றும் இஸ்ரேல், பலஸ்தீனத்தை தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பது குறித்த நியூயோர்க் பிரகடன தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 142 நாடுகளில் இலங்கையும் ஒன்று.

ஜூலை மாதம் ஐ.நா. தலைமையகத்தில் பிரான்ஸ் மற்றும் சவூதி அரேபியா இணைந்து நடத்திய உயர்மட்ட சர்வதேச மாநாட்டில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

இந்த பிரகடனத்தில், 'காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், இரு நாடுகளையும் தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பதன் அடிப்படையில் இஸ்ரேல் - பலஸ்தீன மோதலுக்கு ஒரு நியாயமான, அமைதியான மற்றும் நீடித்த தீர்வை அடைவதற்கும், பலஸ்தீனியர்கள், இஸ்ரேலியர்கள் மற்றும் பிராந்தியத்தின் அனைத்து மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் கூட்டு நடவடிக்கை எடுக்கப்படும்" என வலியுறுத்தப்பட்டது.

பலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவும், கிழக்கு ஜெருசலேம் உட்பட பல பகுதிகளில் நடக்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவும் இஸ்ரேலை அந்த பிரகடனம் கேட்டுக்கொண்டது. (அ)

## மாகாணத் தேர்தலை...

மக்கள் சட்சி ஆட்சியேற்று ஓராண்டு நிறைவடைகிறது.

தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் அரசாங்கம் எதனை நடைமுறைப்படுத்தியுள்ளது? வாக்குறுதிகளை ஒருபுறம் வைத்து விட்டு ஊடக பிரசாரங்களை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது. அவற்றைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அரசியல் பழிவாங்கல்களுக்கும் உட்படுத்துகிறது.

அரசாங்கம் மாத்திரமின்றி பாராளுமன்றத்திலும் சபாநாயகராது நடத்தைகளிலும் பிரச்னையுள்ளது. பாராளுமன்றத்தில் சபாநாயகர் என்பவர் சகல கட்சிகளுக்கும் பொதுவானவர்.

அவரால் அனைத்து கட்சி உறுப்பினர்களும் சமமாகவே நடத்தப்பட வேண்டும். ஆனால் தற்போதைய சபாநாயகரின் நடத்தையை அவதானிக்கும் போது பாராளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகின்றதா என்பதே சந்தேகத்துக்கிடமாகவுள்ளது. இது தொடர்பில் எதிர்க்கட்சி எம்.பி.க்களும் தொடர்ச்சியாக தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் வெளிநாட்டவர்களுக்கு நாட்டின் நிலப்பரப்பில் ஒரு அங்குலம் கூட வழங்கப்படாது எனக் கூறியவர்கள் இன்று முதலீடு என்ற போர்வையில் பல இடங்களை தாரை வார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் அபிவிருத்திக்கு முதலீடுகள் அவசியமாகும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

அதேவேளை பொது இடங்களை அந்நியர்களுக்கு வழங்கும் போது அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது மின் கட்டணம் தொடர்பில் அநுரகுமார திஸநாயக்க மிக அழகான கதைகளை மக்களிடம் கூறினார். மின் கட்டணங்களை மூன்றில் இடங்கு மடங்கால் குறைக்க முடியும் எனக் கூறினார்.

தனது முதலாவது அமைச்சரவை கூட்டத்திலேயே அதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனக் கூறினார். ஆனால் இன்று ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர அவர் கூறியபடி குறைக்கப்படவில்லை.

அத்தோடு அண்மையில் மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடிகளை ஒழித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கியதாகக் கூறிய அரசாங்கம் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்காக அரசாங்கம் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியைப் போன்று இதற்கு முன்னர் எந்தவொரு அரசாங்கமும் மக்களை ஏமாற்றவில்லை. அதே போன்று தான் மாகாணசபைத் தேர்தல் விடயத்திலும் அரசாங்கம் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. மேலும் தாமதப்படுத்தாது வெகு விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

கடந்த அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கமும் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சித்தால் அது தவறாகும்.

மாகாணசபை என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டியவையாகும். எனவே ஆளுனர்களால் அவற்றை தொடர்ந்தும் ஆட்சி செய்ய அனுமதிக்க முடியாது.

அவசர நிலைமைகளில் அவ்வாறு செய்ய முடியும். ஆனால் வருடக்கணக்கில் ஆளுநர் ஆட்சிக்கு இடமளிப்பது தவறாகும். எனவே மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம்.

மாகாணசபைத் தேர்தலைக் கண்டு எதற்காக அஞ்சுகின்றனர்? இத்தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கத்துக்குள் உண்மையான மக்கள் ஆணை வெளிப்படும்.

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் - என்றார். (அ)

## தமிழ்...

சீரழிந்து போயுள்ள சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு உள்ளதாகவும் சுந்தரலிங்கம் பிரதீப் கூறினார்.

போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் தாம் எந்த வித தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல்களும் இல்லாமல் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உரிய விசாரணைகள் நடத்தப்படும் வரை எவரையும் குற்றஞ்சாட்ட முடியாது எனவும் தகவல்கள் உண்மையா பொய்யா என்பதை விசாரணைகள் ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். (அ)

## இந்தியாவில்...

பட்டுள்ளது.

பாகிஸ்தான் அதிகாரி அமீர் சுபைர் சித்திக் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் பாகிஸ்தான் நாட்டின் கராச்சி நகரைச் சேர்ந்தவர் என்றும் தற்போது கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் விசா ஆலோசகராகப் பணிபுரிகிறார் என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நபர் இந்தியாவிற்குள் சதி வேலைகளைச் செய்வதற்காக, இலங்கையைச் சேர்ந்த முகமது சாகிர் ஹூஸைன் என்ற நபரை இந்தியாவுக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியப் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கில் உயர் தரமான கள்ள நோட்டுகளும் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னை கியூ பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவு இந்த வழக்கை முதலில் பதிவு செய்தது. பின்னர், இது தேசிய புலனாய்வு முகவரமைப்பின் ஹைதராபாத் கிளைக்கு மாற்றப்பட்டது.

அமீர் சுபைர் சித்திக் மீது இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ், குற்றவியல் சதி, இந்தியாவுக்கு எதிராகப் போரைத் தொடுப்பது, போலியான அல்லது கள்ள நோட்டுகளைப் பயன்படுத்துவது உள்ளிட்ட குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் முதல் குற்றவாளியான முகமது சாகிர் ஹூஸைன் ஏற்கனவே தண்டனை பெற்றுள்ளார்.

இந்த நிலையில், 2018 ஆம் ஆண்டில், சித்திக் மீது தேசிய புலனாய்வு முகவரமைப்பு கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. தற்போது, அவர் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகிவிட்டதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## நேபாள இடைக்கால பிரதமருக்கு ஜனாதிபதி அநுரகுமார வாழ்த்து



கொழும்பு, செப். 14

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, நேபாளத்தின் இடைக்கால அரசாங்கத்தின் புதிய பிரதமராக நியமிக் கப்பட்டுள்ள சுசீலா கார்க்கிக்கு வாழ்த்து தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்து செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

"சுசீலா கார்க்கி, நேபாளத்தின் பிரதமராகப் பொறுப் பேற்றதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித் துக் கொள்கிறேன். அவரது தலைமை, நேபாளத்தை அமைதி மற்றும் ஜனநாயகத்துக்கு இட்டுச்செல்லும் என நாங்கள் முழுமையாக நம்புகிறோம்," என்று ஜனாதிபதி பதிவிட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி நேபாளத்தில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து, அந்த நாட் டின் பிரதமர் கே.பி. சர்மா ஒலி தலைமையிலான அரசு கவிழ்ந்தது. மக்கள் போராட்டங்களால் 51 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான சுசீலா கார்க்கி, இடைக்கால பிரதமராக நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு ஜனாதிபதி அலுவலகத் தில் இடைக்கால பிரதமராக பதவியேற்றார்.

இந்த நியமனத்தின் மூலம், நேபாளத்தின் வரலாற்றில் பிரதமர் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

நேபாளத்தில் போராட்டங்களை வழிநடத்திய 'ஜென் ஸி' இளைஞர்களின் பிரதிநிதிகளின் வலுவான ஆதரவைப் பெற்ற பின்னர், இடைக்காலப் பிரதமராக சுசீலா கார்க்கி தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)

## 'இவர்கள் மகாத்மாக்கள்' நூல் அறிமுக விழா இன்று

யாழ்ப்பாணம், செப்.14

மூத்த சுயாதீன ஊடகவியாளர் கணபதி சர்வானந்தா எழுதிய இவர்கள் மகாத்மாக்கள் நூலின் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற் கைகள் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவ ராஜா வாழ்த்துரை நிகழ்த்துவார். டில்லி பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவன் ஐ.வி.மகாசேனனின் அறிமுக உரையைத் தொடர்ந்து கலாபூஷணம் பண்டிதை திருமதி வைகுந்தம் கணேசபிள்ளைக்குச் சிறப்புப் பிரதி வழங்கி வைக்கப்படும். உளவளத் துணையாளர் நா. நவராஜ் நூல் தொடர்பான கருத்துரைகளை நிகழ்த்து வார். தொடர்ந்து நூலாசிரியர் ஏற்புரை வழங்குவார். உளவள மருத்துவ சேவையாளர் ந.ஞானசூரியர் நிகழ்வை முன்னிலைப்படுத்துவார்.

## 'வேர்முகங்கள்' நூல் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,செப்.14

பொ.ஐங்கரநேசன் கலை இலக்கியப் பேராளுமை களுடன் நடத்திய நேர்காணல்களின் தொகுப்பான வேர் முகங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவசித்தாந்தத்துறைத் தலைவர் இ.செல்வமனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் -

வரவேற்புரையை கலை இலக்கிய செயல்பாட்டாளர் கை.சரவணனும் வெளியீட்டுரையை எங்கட புத்தகங் கள் பணிப்பாளர் கு.வசீகரனும் கருத்துரைகளை ஊடக வியலாளர் சர்மிளா வினோதன், சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# சபாநாயகர் மீது எதிரணி அதிருப்தி

## விரைவில் நடவடிக்கை

கொழும்பு, செப். 14

**"சபாநாயகர்மீதான நம்பிக்கை குறைவடைந்துவருகின்றது. எனவே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் கட்சி தலைவர்கள் விரைவில் முடிவெடுப்பார்கள்."**

**இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நிறைவடையும்வரை பதவி விலகு மாறு பிரதி பாதுகாப்பு அமைச்சரி டம் வலியுறுத்தினோம். குறித்த சம்பவம் நடக்கும்போது அவரே கிழக்கு மாகாண கட்டளை தளபதி யாக இருந்தார். எனினும், அவர் பதவி விலகவில்லை. அரசும் அவ ரைப் பதவிநீக்கவில்லை. அத னால்தான் நம்பிக்கையில்லாப் பிரே ரணை கொண்டுவரப்பட்டது."- எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பிரேரணையை சபா நாயகர் நிராகரித்துள்ளார். சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட சட்ட ஆலோசனையை சபையில் முன்வைக்கு மாறு நாம் சபாநாயகரி டம் வலியுறுத்தினோம். குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்க முடியும் என சட்டமா அதிபர் கூறினார் என எமக்கு தகவல் கிடைத்தது. அதனை உறுதிப்படுத் திக்கொள்ளவே ஆவணத்தை கோரி னோம். எனினும், அது வழங்கப் படவில்லை.

பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர முடியும். எனினும், சபாநாயகர் அரசியல் முடி வொன்றை எடுத்து அதனை நிரா கரித்துள்ளார். இது அரசாங்கத்தை பாதுகாக்கும் செயலாகும். இது விடயத்தில் சபாநாயகர் ஒரு தலைபட்சமாக செயற்பட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. அப்படி இருந்தும் எதற்காக விவாதத்துக்கு அஞ்ச வேண்டும். இப்பிரேரணையை விவாதத்துக்கு எடுத்தால் ஆளுங்கட்சியில் உள்ள சிலருக்கு கடந்த அரசுகளுடன் இருந்த தொடர்பு அம்பலமாகும். இதனால்தான் ஆளுங்கட்சி அஞ்சு கின்றது." - எனவும் முஜிபூர் ரஹ் மான் குறிப்பிட்டார். (அ)

## 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் வெளியீடு வெள்ளிக்கிழமை கொழும்பில்


யாழ்ப்பாணம்,செப். 14

பத்திரிகையாளர் வீர கத்தி தனபாலசிங்கம் எழு திய "தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்" நூ ல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத் தின் விநோதன் மண்டபத் தில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் வி.ரி. இளங் கோவனும் கருத்துரை களை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எம். ந.ஹியா, கிழக்கு பல்க லைக்கழக நுண்கலைத் துறை பேராசிரியர் எஸ்.ஜெய்சங்கர், சமூக அரசியல் செயற்பாட்டா ளர்கள் தெ.மதுசூதனன், யதீந்திரா ஆகியோரும் நிகழ்ந்துவர். இந்த நூல் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத் தின் வெளியீடாகும். (அ)




# மரண அறிவித்தல்



## இராயப்பு பிரான்சிஸ்
## (துரை)

ஊர்காவற்றுறை , நாரந்தனை மேற்கு

**மலர்வு : 04.06.1947** **உதிர்வு : 10.09.2025**

ஊர்காவற்றுறை, நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசாவிளானை வதிவிடமாகவும், இந்தியா - திருச்சி நகரை தற் காலிக வதிவிடமாகவும் கொண்ட இராயப்பு பிரான்சிஸ் கடந்த 10.09.2025 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராயப்பு (செல்லத்தம்பி) - அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சீவரத்தினம்(சீவி)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரியநாயகம், ஸ்கொலஸ்ரிக்கா (அழகம்மா - பிரான்ஸ்), சூசைதாசன்(எலியாஸ் - யாழ்ப்பாணம்), வயலற் (பவுலின் - யாழ்ப்பாணம்), மறீனா (மரியம்மா- யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்

பிறேமினி(சுவிஸ்), சியாமினி(இந்தியா), அமலன்(பிரான்ஸ்), சர்மினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் றேமன்(சுவிஸ்), தீபன்(இலங்கை), ஆசா(பிரான்ஸ்), பிரசாத்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலக்சாந், லிசானி, றெஸ்மி, றெக்சிகா, அஸ்வின், அஸ்வந், அஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஜெயமலர், இம்மானுவேல் (துரைஐயா), அந்தோனிப் பிள்ளை மற்றும் லில்லி, அல்பிரட், எல்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும்

வரதராசா - வவா, செல்வராசா - தங்கரத்தினம், மரியநாயகம் - தேவரத்தினம், நற்குணராசா ராணி, சேவியர் - பத்திநாயகி, தருமராசா - பூமணி, சிவபாதலிங்கம் - புஸ்பரத்தினம், தேவராசா - வவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (13.09.2025) சனிக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டு இன்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 03.00 மணியளவில் திருச்சி நகரிலுள்ள ஜெகன்மாதா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி அஞ்சலித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆங்கிலோ இந்தியன் சேமக்காலையில் பூதவுடல் (மேலபுதூர் - திருச்சி) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சகோதரர்கள் குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org